*13*

# ஆராதனையில் இசை பற்றி தேவனுடைய சித்தத்தை நாடுபவர்களுக்கு ஒரு வெளிப்படையான கடிதம்

*அன்புள்ள நண்பருக்கு,*

*ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆராதனைபற்றிப் புதிய ஏற்பாடு போதிப்பது என்ன என்று அறிவதற்கு நீங்கள் விரும்புகிறீர்கள் என்று நான் நம்புகிறேன், எனவே அதைப் பற்றி நாம் ஒன்றுகூடிச் சிந்திப்போம்.*

*புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஆராதனையில் இசைக்கருவிகளின் இசை என்பதைப் பற்றிய விஷயத்தின், நியாயமான ஒருதலைப் பட்சமற்ற ஆய்வானது, இந்தத் தலைப்பு இரட்சிப்பிற்கு ஞானஸ்நானத்தின் அவசியம் பற்றியது போல் அவ்வளவு தெளிவாக இருப்பதில்லை என்பதை வெளிப்படுத்தும். இருப்பினும் இந்த உண்மையானது, இத்தலைப்பு பொருத்தமற்றது என்றோ அல்லது இதை நாம் காணாமல் விட்டுவிடக் கூடும்படி சாட்சியம் போதுமானதாக இருப்பதில்லை என்றோ மறைமுகமாக உணர்த்துவதில்லை. வேத வசனங்களை எவ்வாறு அணுகுவது என்ற நமது புரிந்துகொள்ளுதலும் கர்த்தர் தமது சித்தத்தையும் எதிர்பார்ப்புகளும் எவ்வாறு நமக்குத் தெரியப் படுத்துகிறார் என்பதும் இடர்ப்பாட்டில் உள்ளது. கர்த்தர் தமது சித்தத்தை எழுத்துவடிவில் கொடுத்து இருக்கிறார், மற்றும் இது நமது நம்பிக்கைகளும் நடைமுறைகளும் தீர்மானிக்கப்படுவதற்கான அடித்தளமாகப் பணிசெய்கிறது.*[1]

*தேவனுடனான நமது உறவுமுறையில் நமது சொந்த உண்மையற்ற தன்மை மீது சார்ந்திருத்தலுக்கு எதிராக வேதவாக்கியங்கள் எச்சரிக்கின்றன (நீதி மொழிகள் 14:12; எரேமியா 10:23). சதுசேயர்கள் "வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும்" அறியாததால் அவர்கள் தப்பெண்ணம் கொண்டிருந்தனர் என்று அவர்களுக்கு இயேசு சுட்டிக்காண்பித்தார் (மத்தேயு 22:29). அவரையும் அவரது போதனையையும் புறக்கணித்தவர்கள் அந்த போதனையினாலேயே நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று அவர் கூறினார் (யோவான் 12:48-50). நாம் தேவனைப் பிரியமற்றவராக்கி விடுவோமோ என்ற பயத்தினால் மாத்திரம் அவரைச் சேவித்தல் கூடாது என்றிருக்கையில், நாம் தெரிந்தே அவரது சித்தத்தைப் புறம்பே தள்ளிவைத்தால் அவரது பிரியமற்ற தன்மைக்கு ஆளாகும் உண்மைநிலை இன்னமும் உள்ளது (காண்க எபிரெயர் 10:31).*

ஆராதனையில் இசை பற்றிப் புதிய ஏற்பாடு கூறுவது என்ன? தேவன் எவ்வகையான இசையை விரும்புகிறார் என்ற கேள்வியை நாம் கவனத்துடன் ஆராய்வோமாக.

*முதல் நூற்றாண்டு சபையில் இசை பற்றிப் புதிய ஏற்பாடு கூறுவது என்ன மற்றும் அந்த இசையின் நோக்கம் என்ன என்பது பற்றி உற்று நோக்குதல் நமது தொடக்க இடமாக இருக்க வேண்டும்.* சில வேதவசனங்கள், அவற்றின் சந்தர்ப்பப் பொருளானது ஒன்றிணைந்த ஆராதனையைக் குறிக்கிறதா அல் லது தனிப்பட்ட ஆராதனையைக் குறிக்கிறதா என்பதில் தெளிவற்றதாக இருப்பதால், சந்தர்ப்பப்பொருளில் மிகச் தெளிவாக உள்ள வசனப்பகுதிகளை நாம் கண்ணோக்குவோம்.

கடைசி இராப்போஜனத்தில் இயேசுவும் அவரது சீஷர்களும், ஸ்தோத்திரப் பாடலைப் பாடினர் (மத்தேயு 26:30; மாற்கு 14:26), இது பஸ்கா பண்டிகை தொடர்பான சங்கீதங்களைப் பாடுதலை உள்ளடக்கி இருந்தது என்பது ஏறக்குறைய உறுதியாக உள்ளது (சங்கீதம் 113-118; 136). இது கடைசி இராப்போஜனத்திற்கான சந்தர்ப்பப்பொருளாக இருந்தது (காண்க லூக்கா 22:7, 8).

1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல், சபைகூடுகையில் சரியான நடக்கை பற்றி சபைக்கு அறிவுறுத்தினார். பாடுதல் என்பது ஆராதனை செயல்களில் ஒன்றாக இருந்தது என்பது தெளிவு, மற்றும் அவர்கள் சரியான எண்ணப்போக்குடனும் புரிந்துகொள்ளுதலுடனும் பாடவேண்டும் என்று அவர்களுக்குப் பவுல் புத்தி கூறினார்: "நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடு பாடுவேன்" (14:15ஆ). மற்றும் அவர், சபைக்கூடுகையில் சிலர் "சங்கீதம்" பாடுவதாகவும் சுட்டிக்காண்பித்தார் (14:26). பக்தி விருத்தி (அதாவது அறிவுறுத்தல்) நடைபெற வேண்டும் என்பது பவுலின் புத்திமதியினுடைய பகுத்து அறிதலின் பாகமாக உள்ளது. இதை அவர் இந்த அதிகாரம் முழுவதிலும் வலியுறுத்தினார் (காண்க வசனங்கள் 4, 5, 17). ஆகையால், நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு அறிவுறுத்துதல் என்பது பாடுதலின் ஒரு பாகமாக உள்ளது.

இந்த உய்த்துணர்வுக் கருத்தானது எபேசியர் 5:19, 20ம் வசனங்களினால் உறுதிப்படுத்தப்படுகிறது, அங்கு பவுல் கிறிஸ்தவர்களை, நிச்சயமாக ஒன்றிணைந்து சபைகூடுகையில் ("ஒருவருக்கொருவர்" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள்), "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" என்று ஊக்குவித்தார். இவ்வசனப்பகுதி யானது ஒருவர் மற்றவருடனான செய்தித்தொடர்பைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கையில், இது பாடுதல் என்பது பிதாவுக்கு துதியை வெளிப்படுத்தும் வழியாகவும் உள்ளது என்பதையும் கூடுதலாகத் தெரியப்படுத்துகிறது. எனவே நமது பாடுதலின் நோக்கத்தில், தேவனுடனான நமது செய்தித்தொடர்பும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கொலோசெயர் 3:16ம் வசனம், பரஸ்பரம் அறிவுறுத்துதல் மற்றும் புத்தி கூறுதலையும் தேவனுக்குத் துதியையும் ஒன்றிணைக்கிறது: "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்

ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி; ... தேவனை ஸ்தோத்திரியுங்கள்." இந்த மொழிபெயர்ப்பு, தனித்தனியான இரண்டு செயல்கள் உள்ளடங்கி இருப்பதை அர்த்தப்படுத்துவதாகப் புரிந்துகொள்ளப்பட முடியும்: (1) ஒருவருக்கொருவர் போதித்தல் மற்றும் (2) தேவனை நோக்கிப் பாடுதல். இவ்வசனப்பகுதியானது மிகவும் நேர்ப்பொருளில், பாடுதல் என்பது மற்றவர்களுக்குப் போதித்தலாகவும் அதே வேளையில் தேவனைத் துதித்தலாகவும் உள்ளதைக் காண்பிக்கிறது. "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் (மற்றும்) கீர்த்தனைகளினாலும் (மற்றும்) ஞானப்பாட்டுகளினாலும் (நீங்கள்) ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு,[2] உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி; ... ஸ்தோத்திரியுங்கள்"[3] (மொழிபெயர்ப்பு என்னுடையது).

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் "பாடல்" அல்லது "பாடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட குறிப்பான வார்த்தை ஒன்றை 13:15ல் பயன்படுத்தவில்லை. அவரது அறிவுறுத்தலானது, பாடுதல் - "உதடுகளின் கனி" - என்பது தேவனுக்குத் துதியின் பலியைச் செலுத்தும் ஒரு வழியாக உள்ளது என்று உரைக்கிறது.

ஒருவர் சந்தோஷமாக இருந்தால், அவர் துதிப்பாடல்களைப் பாடவேண்டும் என்று யாக்கோபு குறிப்பிட்டார் (5:13ஆ), இந்த நடவடிக்கையின் சந்தர்ப்பப்பொருள் தெளிவாக இல்லை என்றாலும் இது உண்மையாக உள்ளது. இதே வசனப்பகுதியில் அவர், ஒருவர் வியாதிப்பட்டு இருக்கும்போது, அவர் மூப்பர்களை அழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார் (5:14), இது பொது சபைக் கூடுகை தவிர மற்ற சந்தர்ப்பப்பொருளை மறைமுகமாக உணர்த்துகிறது. இருப்பினும் ஒரு சில வசனங்களுக்குப் பின், கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரிடத்தில் அறிக்கை செய்து ஜெபம் செய்ய வேண்டும் என்று கூறிய புத்திமதியானது சபைகூடுகையின் வகையொன்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

பாடுதல் என்பது தேவனைத் துதிப்பதற்கான வழியாக உள்ளது, பாடல் என்பது எப்போதுமே சுய வெளிப்பாட்டின் வகையாக இருந்துள்ளது. பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் எழுதிய பாடல்கள், சொல்விளக்கத்தின் இவ்வகையானது மக்களின் இருதயங்களைத் தொடுவது மட்டுமின்றி விசேஷித்த வழியில் தேவனையும் தொடுகிறது என்பது நிச்சயம்.

அறிவுறுத்துதல் என்பது, ஒருவர் மற்றவருக்கு (அதாவது நமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகள்) என்ற வகையில் மட்டுப்படுத்தப்பட்டதாக மாத்திரம் உள்ளதா? இல்லை. எபிரெயர் 2:12 மற்றும் ரோமர் 15:9 ஆகிய வசனங்கள், பாடுதலில் சுவிசேஷ ஊழியத்தின் கூறு ஒன்றுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. இவ்விரு வசனப்பகுதிகளிலும் இயேசு, புறஜாதியார் மத்தியில் தேவனுடைய நாமத்தை அறிவிப்பவராக விவரிக்கப்பட்டுள்ளார்.[4] அவரது செய்கையின் விளைவாகப் புறஜாதியார் சிலர் கர்த்தருக்குள் வருவார்கள், இது ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் கூற்றுப்படி, இயேசுவின் ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

பாடுதல் என்பது சுவிசேஷ ஊழியத்திற்கு என்று முதன்மையாக வடிவமைக்கப்பட்டு இருந்தாலும் இல்லை என்றாலும், மேற் குறிப்பிடப்பட்ட, எபிரெயருக்கு எழுதிய நிருபம் மற்றும் ரோமருக்கு எழுதிய நிருபம்

ஆகியவற்றில் சுட்டிக் காட்டப்பட்டபடி மாத்திரமல்ல, ஆனால் பிலிப்பி நகரின் சிறைச்சாலையில் பவுல் மற்றும் சீலா ஆகியோரின் செயல்பாட்டினாலும், அது (பாடல்) அவ்வாறாக செயல்படும் வேளை அவ்வப்போது உள்ளது என்று அறியப்படுகிறது. அவர்கள் "ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" (நடபடிகள் 16:25). பூமியதிர்ச்சியானது விலங்குகள் கழன்று போகவும் கதவுகள் திறந்து போகவும் செய்த போது, சிறைச்சாலை அதிகாரி, தாம் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும் அளவுக்குப் போதுமானவற்றை அறிந்தார் (நடபடிகள் 16:30). அவர் தூங்கச் செல்வதற்கு முன்னர், அவர்கள் பாடியது மற்றும் ஜெபிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த செயல், இந்தக் கேள்வியைக் கேட்கப் போதுமான அளவுக்கு அவருக்குப் போதித்து இருந்ததா?

கிறிஸ்தவர்களின் அமைப்பு என்ற வகையில் பாடுதல் என்பது ஒன்றிப்பை உள்ளடக்கி இருக்கிறது. பவுல் பின்வருமாறு கட்டளையிட்டபோது பாடுதலைத் தமது சிந்தையில் கொண்டிருந்தவராகக் காணப்படுகிறார்,

> நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக (ரோமர் 15:5, 6).

பாடுதல் என்பது ஒவ்வொருவரும் அவசியமாக ஈடுபடும் விஷயமாக உள்ளது. பாடப்படுவது என்ன, அது எப்போது பாடப்படுகிறது மற்றும் அது எவ்வளவு வேகமாகப் பாடப்படுகிறது என்பவற்றில் சரீரம் [சபை] கருத்து ஒருமைப்பட வேண்டும் என்பது ஒன்றிப்பின் கூடுதலான இன்னொரு கூறாக உள்ளது. ஒன்றிணைந்த ஆராதனை செயல் போன்றவற்றில் தேவனுடைய மக்களின் ஒன்றிப்பானது, தேவனுக்குப் புகழ்ச்சியின் பலியை நாம் அளிக்க ஒன்றுகூடுகையில், தேவனுக்கு அது பிரியமானதாக இருக்க வேண்டும்.

தேவனுக்கு வாய்ப்பாட்டை அளித்தல் என்பது பன்முக வடிவம் உடையதாக இருக்கிறது. அது ஆராதனையின் ஒரு பாகமாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டமாக உள்ளது தெளிவு, மற்றும் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லி போதிப்பதற்கு வழியாகவும், அவருக்கு துதியை வெளிப்படுத்த ஒரு வாகனமாகவும், அவிசுவாசிகளுக்கு அவரது வசனத்தை அறிவிக்க வழிமுறையாகவும் மற்றும் பல அளவிலான விளைவுகளைக் கொண்டுள்ள ஒரு செயல்பாட்டில் அவரது மக்கள் ஒன்றணையும் வழிமுறையாகவும் அவர் அதை வடிவமைத்துள்ளார்.

இங்கு குறிப்பிடுதல் ஏற்புடையதல்ல என்பதாகக் காணப்பட்டாலும், வார்த்தைகள் சிலவற்றை அர்த்தப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் பாடுதல் பற்றிக் கலந்துரையாடுதலில், நாம் வார்த்தைகளுக்கு நமது சொந்த அர்த்தங்களைச் சுமத்துவதற்கோ அல்லது நாம் காண விரும்பும் சிலவற்றை வசனத்திற்குள் வாசிப்பதற்கோ நமக்கு உரிமை இல்லை. மேலும், காலப் போக்கில், சில வேளைகளில் வார்த்தைகள் தங்கள் அர்த்தத்தில் மாறுவதால்,

ஒரு பதிவேடு எழுதப்பட்ட வேளையில் மேலோங்கியிருந்த விளக்கங்களைப் பயன்படுத்துதல் முக்கியமானதாக உள்ளது. தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்ற இரு அர்த்தங்களுமே புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் அர்த்தத்தினுடைய பாகமாயிராதபடியால் ஞானஸ்நானம் பற்றிய வேதாகமரீதியான போதனையில் தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்ற கருத்தைத் திணித்தல் என்பது இதனால்தான் தகுதியற்றதாக உள்ளது.

சில விஷயங்களை நாம் புரிந்துகொள்ளாதபோது அல்லது யாரேனும் ஒருவர் கூறியுள்ளவற்றால் (அல்லது எழுதியவற்றால்) நாம் மனம் புண்படும்போது, "நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?" என்று கேட்பதன் மூலம் நாம் விளக்கத்தை நாடுகிறோம். தேவனுடனான நமது உறவில், அவரை நாம் புரிந்துகொள்ள நாடுதல் என்பது அதைப்போன்றே முக்கியமானதாக உள்ளது (எபேசியர் 5:15-17). ஆராதனையில் நாம் பயன்படுத்தும் இசை பற்றி, "பாட" என்று அர்த்தப்படும் வார்த்தைகளைக் கர்த்தர் சீர்பொருத்தமாக/தொடர்ச்சியாகப் பயன்படுத்தினார். அடிப்படையில் மூன்று வார்த்தைகள் உள்ளன, மற்றும் அவை யாவையும் "பாடுதல்" என்றே சீர்பொருத்தமாகத் தரவழைக்கப் பட்டுள்ளன.

முதலாவது *ado* (இதிலிருந்தே "ode" என்ற ஆங்கில வார்த்தை வந்தது) என்ற வார்த்தையாகும். ஒரு ஆதாரமூலமானது, இதை "பாட, உச்சாடனம்பண்ண" என்று விளக்கப்படுத்துகிறது.[5] இன்னொரு ஆதாரமூலம் "பாடல்" என்று மாத்திரம் அர்த்தம் கொண்டுள்ளது.[6]

*Humneo* என்பது இரண்டாவது வார்த்தையாகும் (இதிலிருந்தே நாம் "hymn" என்ற ஆங்கில வார்த்தையைத் தரவழைக்கிறோம்). ஜோசப் தாயெர் என்பவர், இவ்வார்த்தையை அதன் மாறுபடு வடிவில் "துதியைப் பாட, கீர்த்தனைகளைப் பாட" என்றும் அதன் மாறுபட வடிவில் அதை "ஒரு கீர்த்தனையைப் பாடுதல், பாடுதல்" என்றும் விளக்கப் படுத்துகிறார்.[7] வில்லியம் அர்ன்டிட் மற்றும் வில்பர் கிங்ரிச் ஆகியோர் இதேபோன்று, மாறுபடும் வடிவில் "யாரேனும் ஒருவரைக் குறித்து, துதியைப் பாடுதல், துதியைக்கீர்த்தனம் செய்து பாடுதல்" என்றும் மாறு படா வடிவில் "ஒரு கீர்த்தனம் (பாடுதல்)" என்றும் தரவழைத்தனர்.[8]

*Psalmos* என்பது மூன்றாவது வார்த்தையாக உள்ளது (இதிலிருந்தே நாம் "psalm" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம்). இந்த வார்த்தை சற்றே அதி கம் சிக்கலானதாக உள்ளது மற்றும் இது முன்னேற்றத்தில் பரிணாமம் சிலவற்றைக் காண்பிக்கிறது. இது தொடக்கத்தில் (முடி போன்றவற்றை) "பிடுங்குதல், இழுத்தல்" என்று அர்த்தப் பட்டதாகத் தாயெர் என்பவர் குறிப்பிட்டார். பிற்பாடு இது, "இசைக்கருவியின் கம்பிகள் மெதுவாக அதிரும்படி அவற்றை இழுத்தல்" என்பது போன்ற, "தொடுதலினால் அதிர்வுக்குக் காரணமாகுதல், தெறித்தல்" என்று அர்த்தம் கொள்ளப்படலாயிற்று, எனவே இது "கம்பி இசைக்கருவியை இசைத்தல், சுரமண்டலத்தை மீட்டுதல்" என்ற அர்த்தம் தருவதாயிற்று. பின்பு தாயெர், புதிய ஏற்பாட்டில் இது, "ஒரு கீர்த்தனம் பாடுதல், பாடலில் தேவனின் துதியை ஆசரித்தல்" என்று அர்த்தப்பட்டதாகக் குறிப்பிட்டார்.[9] இருப்பினும் அர்னடிட் மற்றும் கிங்ரிச் ஆகியோர் இவ்வார்த்தையை, "(பழைய ஏற்பாட்டுப்) பயன்பாட்டின்படி, (சுரமண்டலத்தின் துணையுடன்) பாடுதல், துதி யாருக்கு ஏறெடுக்கப்படும் நோக்கங்கொள்ளப்பட்டுள்ளதோ அவருக்குத் துதியைப் பாடுதல்" என்று விளக்கப்படுத்தினர்.[10] சிலர் கூடுதலாக, புதிய ஏற்பாட்டில் பாடுதலுக்குத் துணையாக உள்ள "இசைக்கருவி" என்பது "உங்கள் இருதயம்"[11]

என்பதே என்று குறிப்பிட்டனர் (எபேசியர் 5:19).

*Psallo* என்ற இந்தக் கடைசி வார்த்தையின் வினை வடிவத்தில் ஒரு முரண்பாடு எழுந்துள்ளது. சிலர், இயந்திரத்தனமான இசைக்கருவிகளின் துணையானது இவ்வசனத்தில் உள்ளாக மறைந்திருக்கிற காரணத்தினால் அவைகள் ஆராதனை சபை கூடுகைகளில் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன என்று திருப்தி அடைகின்றனர்.[12] இவ்விவாதம் மூன்று பலவீனங்களைக் கொண்டுள்ளது. (1) இந்த வார்த்தை அர்த்தத்தில் பரிணாமம் அடைந்துள்ளது. இது "முடியைப் பிடுங்குதல் அல்லது இழுத்தல்" என்ற அர்த்தத்துடன் தொடங்கிற்று. இந்த அர்த்தம் நமது ஆராதனையில் தழுவப்பட வேண்டும் என்று எவரொருவரும் விவாதிக்க மாட்டார்கள், ஏனெனில் இந்த விளக்கமானது, புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுவதற்குக் கணிசமான காலத்திற்கு முன்பிருந்துதான் வருகிறது.[13] சொல்வளம் மீது நாம் "பலவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்" என்ற விருப்பத்தேர்வை நிகழ்த்தவும் வார்த்தையின் வரலாற்றில் கிடைக்கும் எந்த அர்த்தத்தையாவது திணிக்கவும் முடியாது. (2) தொடக்காலக் கிறிஸ்தவர்கள், இவ்வார்த்தையானது பாடுதலைக் குறித்தது மற்றும் இசைக்கருவிகளின் துணை எதுவும் உள்ளடக்கப்படலாகாது என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர்; சபையானது வாய்ப்பாட்டை [a cappella[14]] பாடியது, இது முதல் பல நூற்றாண்டுகளுக்கே உரிய தனிப்பட்ட சிறப்பாக இருந்தது.[15] (3) எந்தக் கருவி பயன்படுத்தப்படவேண்டும் என்று வேதாகமம் அறிவுறுத்துகிறது: தனிநபரின் இருதயம் (எபேசியர் 5:19). தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இந்த அர்த்தத்தைப் புரிந்துகொண்டு இருந்தனர்.

கிரேக்க மொழியானது இசைக்கருவிகளின் பயன்பாட்டை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் வார்த்தைகளைக் கொண்டிருந்தது என்பது, வாய்ப்பாட்டிற்கான உய்த்துணர்வுக் கருத்தை மேலும் உறுதிப்படுத்தும் மொழியியல் சார்ந்த உண்மையாக உள்ளது; ஆனால் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், ஆராதனைக்கான அறிவுறுத்துதலை அளிப்பதில் இந்த வார்த்தைளைப் பயன்படுத்தவில்லை.[16] இசைத்துறைக்குரிய பொதுமைப் படுத்தப்பட்ட இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துவதில் அறிவுறுத்தல் எதுவும் இராமை என்பது குறிப்பிடத்தக்க எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும்.

நாம், (1) பாடுதல் என்பது, அறிவுறுத்துதல், துதி மற்றும் சுவிசேஷ ஊழியம் ஆகியவற்றிற்காக சபைகூடுகையில் ஒரு பாகமாக இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு சுட்டிக்காண்பிக்கிறது என்றும், (2) புதிய ஏற்பாடு, சொல்வளமானது (இசைக்கருவிகளுக்கான அறிவுறுத்துதல் எதுவும் இல்லை என்ற தெளிவான நிலையில்) "பாடுதல்" என்பதைச் சீர்பொருத்தமாக/தொடர்ச்சியாக அர்த்தப்படுத்துகிறது என்றும் கற்றுள்ளோம். இந்த உண்மைகளில் இருந்து நாம், பாடுதல் என்பது ஆராதனையில் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய ஒருபாகமாக இருந்தது என்பது நிச்சயம் என்றும் அதன் முன்னுரிமைத்துவம் பற்றி எந்த விவாதமோ அல்லது கேள்வியோ இருக்கக் கூடாது என்றும் உய்த்துணர வேண்டும்.

*புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாடு பற்றிய கேள்விகள் மற்றும் பிரச்சனைகளை நாம் இப்போது கண்ணோக்குவோமாக.* சபைகூடுகையில் பாடுதல் என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வெளிப்பாட்டின்

வழிமுறை என்பதாக உள்ளது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. அந்த சபை கூடுகைகளில் இசைக்கருவிகளின் துணை ஈடுபடுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதே முடிவு செய்ய எஞ்சியுள்ள விஷயமாகும்.

முதலாவது, பழைய ஏற்பாட்டில் இசைக்கருவிகள் பற்றிய தெளிவான குறிப்புகளைக் கொண்டுள்ள காரணத்தால், ஆராதனையில் இசைக்கருவிகளின் இசை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது என்று பலர் கூறுகின்றனர். சங்கீதம் 150, இப்படிப்பட்ட அதிகாரத்துவத்திற்கு மிக அடிக்கடி சுட்டிக்காண்பிக்கப்படும் வசனப் பகுதிகளில் ஒன்றாக உள்ளது, அதில் சங்கீதக்காரர் பின்வருமாறு அறிவித்தார்:

> தேவனை ... துதியுங்கள்; ...
> எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும்
> சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.
> தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்;
> யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்.
> ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்;
> பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள் ... .

தேவாலயத்தைக் கட்டுவதற்கும் அதில் ஆராதிப்பதற்கும் தாவீது தயாரான போது, அந்த ஆசரிப்பில் இசைக்கருவிகளின் இசை ஒரு பாகமாக இருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்: "தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு சுரமண்டலம் கைத்தாளம் முதலிய கீதவாக்கியங்கள் முழங்க, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்தவேண்டும் என்று சொன்னான்" (1 நாளாகமம் 15:16).[17] இருப்பினும் தாவீது தமது சுய தூண்டுதலின்படி செயல்படவில்லை, ஆனால் தமக்கு கர்த்தர் கட்டளையிட்டவற்றையே அவர் செயல்படுத்தினார். இது, தேவாலயத்தில் எசேக்கியா தக்க ஆராதனையை நிலைநாட்டியபோது செய்த சீர்திருத்தங்களில் தெளிவாக்கப்பட்டுள்ளது:

> அவன், தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச் செய்யவேண்டும் என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உண்டாயிருந்தது. அப்படியே லேவியர் தாவீதின் கீதவாத்தியங்களையும், ஆசாரியர் பூரிகைகளையும் பிடித்து நின்றார்கள் (2 நாளாகமம் 29:25, 26).

ஆகையால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஆராதனை ஊழியத்தில் இப்படிப்பட்ட இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கான குறிப்புகள் மற்றும் புத்திமதிகள் ஆகியவற்றைக் காண்பதில் திகைப்பு எதுவும் வரக்கூடாது.

இந்தப் பின்னணியிலிருந்து சிலர், எபேசியருக்கு எழுதிய நிருபமானது சங்கீதங்களைப் பாடும்படி புத்திகூறுவதால், இசைக் கருவிகளின் இசையானது புதிய ஏற்பாட்டு ஆராதனையில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று

விவாதிக்கின்றனர். சங்கீதங்களின் புத்தகம் (சங்கீதம் 150ல் குறிப்பிட்டுள்ளபடி) தேவனைத் துதிப்பதற்கு, எக்காளம், சுரமண்டலம், வீணை ஆகியவற்றை உள்ளடக்குகிறது என்பதால், இசைக்கருவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள என்ற கருத்தில் அவர்கள் மனதிருப்தியாக உள்ளனர்.

முதல் நூற்றாண்டு உலகத்தில், பழைய ஏற்பாட்டில் உள்ளவை மாத்திரமே சங்கீதங்கள் என்ற தோற்றப் பிழையான யூகமானது, இந்த மனநிறைவில் உள்ள ஒரு தவறாக இருக்கிறது. இருப்பினும் பவுல், சபைகூடுகையில் மக்கள் "சங்கீதங்கள்" உடன் வந்த சந்தர்ப்பங்கள் இருந்தன என்று குறிப்பிட்டார், மற்றும் அவரே அப்படிப்பட்ட ஒரு சங்கீதத்தை புதிய சிருஷ்டி அல்லது வெளிப்படுத்துதல் என்ற வகையில் அறிமுகப்படுத்தினார் (காண்க 1 கொரிந்தியர் 14:26).[18]

மேலும் இந்த விவாதம், சங்கீதங்களின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராதனையின் ஒவ்வொரு வகையும் அதேபோன்று அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்றும் யூகிக்கிறது. காணிக்கைகள் மற்றும் பலிசெலுத்துதல்கள் பற்றிய விஷயம் என்னவாக இருக்கிறது? சங்கீதம் 66:13-15ஐ வாசிக்கவும் (மேலும் காண்க 50:14; 54:6; 107:22; 116:17).[19]

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற ஆராதனையின் கட்டளைகள் மற்றும் வகைகள், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் முழுமையாகவும் பயன்படுத்தப்படும் வகையில் தழுவப்படக் கூடியவை அல்ல என்று புரிந்துகொள்கின்றனர். பழைய உடன்படிக்கை எடுத்துப் போடப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்பது எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் வலியுறுத்திய ஒரு கருத்தாக இருந்தது (7-10 அதிகாரங்கள்). அவர் நிறைவாக, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களிடத்தில், கர்த்தராகிய இயேசுவை விட்டுச் செல்லாதிருக்கவும் மோசேயின் பிரமாணத்தில் உள்ள தங்கள் பழைய வழிகளுக்குத் திரும்பாது இருக்கவும் வேண்டுகோள் விடுத்தார்.

கலாத்தியருக்கு எழுதிய நிருபம் இதேபோன்ற விவாதம் ஒன்றை முன்வைக்கிறது, ஆனால் குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாட்டை இது கொண்டுள்ளது. எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், கிறிஸ்தவர்கள் இயேசுவை விட்டுவிட்டு மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குத் திரும்புதல் என்ற இடர்ப்பாடு இருக்கையில், கலாத்தியர்கள் மத்தியில் பழைய மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கிறிஸ்தவத்துடன் ஒன்று கலத்தல் என்பது பிரச்சனையாக இருந்தது. இவ்விரு பிரமாணங்களின் கூறுகளையும் ஒன்றாக்கிக் கொண்டிருந்தவர்கள், தங்களை "அழைத்தவரை விட்டுத் திரும்புகிற" மக்களாக இருந்தனர் என்று பவுல் அறிவித்தார் (1:6). அப்படிப்பட்ட விலக்கம் ஒன்றைப் பரிந்துரை செய்கிறவர்கள், வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முயற்சி செய்தனர், அவர்கள் "சபிக்கப்பட" பாத்திரர்களாக இருந்தனர் (1:8, 9).

புதிய ஏற்பாட்டின் இந்த எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தில் இருந்து அங்கீகரிக்கப்படாத பாகங்களைப் புதிய ஏற்பாட்டிற்குக் கொண்டுவருதலுக்கு எதிராகக் கடுமையாகப் பேசினர். அதே தவறைச் செய்யாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இரண்டாவது, புதிய ஏற்பாட்டு யுகத்தில் இசைக்கருவியின் இசையானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அதற்குள்ள குறிப்புகளின்

அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று சிலர் கருத்துரைத்து உள்ளனர். எக்காளங்கள் (4:1; 8:6-12) மற்றும் சுரமண்டலங்கள் (5:8; 14:2) ஆகியவை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவிகளில் உள்ளன. அதேபோன்று தூபவர்க்கத்திற்கான குறிப்புகளும் உள்ளன (5:8).

பரலோகத்தில் சில விஷயங்கள் உள்ளன என்பது, அதை நாம் நமது சபைகூடுகைகளில் ஆராதனையின் ஒரு செயலாக இறக்குமதி செய்துகொள்வதற்கு நமக்கு அதிகாரம் தருவதில்லை. நமது எழுத்தாளர் இன்னொரு பிரச்சனையைச் சுட்டிக்காண்பித்தார்:

> இருப்பினும் நேரடி அர்த்தம் காணுதலின் பிரச்சனையே இசைக்கருவிகளைப் பயன்படுத்துபவர்களுக்கு இக்கட்டானதாக உள்ளது. குறிப்பிட்ட சில விஷயங்களை யோவான் தமக்கு "குறிப்பால் உணர்த்தப்பட்டவையாக" - அதாவது, குறிகள் அல்லது அடையாளங்களால் குறிக்கப்பட்டவைகளைக் கொண்டிருந்தார் என்பதை நினைவில் வைக்கவும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:1).[20] யோவான் சுரமண்டலங்களை முதன் முதலாகக் கண்ட அதே காட்சியில் (வெளிப்படுத்தின விசேஷம் 5), அவர் ஒரு சிங்கத்தைக் காண்பார் என்று அவருக்கு வாக்களிக்கப்பட்டது (5:5). ஆனால் "சிங்கம்" தோன்றியபோது, அது சிங்கமாக அல்ல ஆனால் ஒரு ஆட்டுக்குட்டியாக இருந்தார் (வசனம் 6). ஆனால் அது ஒரு ஆட்டுக்குட்டியும் அல்ல: அவர் இயேசுவே (வசனம் 9). இப்போது, யோவான் கண்ட சிங்கம் நேரடியான ஒரு சிங்கமல்ல மற்றும் ஆட்டுக்குட்டி என்பது நேரடியான ஆட்டுகுட்டியும் அல்ல என்றால், எக்காளங்கள் நேரடியான எக்காளங்கள் அல்ல என்பது எந்த வாதத்தால் நிரூபிக்கப்பட - அல்லது அறிவுக்கேற்ற வகையில் முடிவு செய்யப்படவாவது - முடியும்? குறிப்பாக இது யாவும் பரலோகத்தில் நடைபெற்றது. பரலோகம் என்பது "மாம்சமும் இரத்தமும்" பிரவேசிக்க இயலாத இடமாக உள்ளது என்றால் (இ.வ. 1 கொரிந்தியர் 15:50), எக்காளங்கள் மற்றும் தூபக் கலசங்கள் போன்ற உலகப்பிரகாரமான பொருட்களை அங்கு காணலாம் என்று நேரடியான அர்த்தத்தில் நேர்மையாக நாம் எதிர்பார்க்க முடியுமா?[21]

பழைய ஏற்பாட்டில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தக் குறிப்புகள் மற்றும் கட்டளைகளும் கூட உள்ளன, மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் இதற்குக் குறிப்புகளும் மறைவான குறிப்புகளும் உள்ளன என்பது தெளிவாக இருக்கையில், புதிய ஏற்பாடானது பூமியில் ஆராதனைக்கு இசைக்கருவிகள் பயன்படுத்துதல் பற்றிக் கண்டிப்பான அமைதி காக்கிறது. தேவன் தமது செய்தித்தொடர்பில் பயன்படுத்த வார்த்தைகளை தேர்ந்து கொண்டுள்ளார் (காண்க - 1 கொரிந்தியர் 2:11-13), மற்றும் இவைகள் நேரடியான அர்த்தத்தில் இயந்திர இசைக்கருவிகளை உள்ளடக்கவில்லை. அவற்றின் அர்த்தங்களை மாற்றி அமைத்தல் என்பது வேதவசனங்களைத் தவறாக பிரதிநிதித்துவப் படுத்துதலாகிவிடும்.

மூன்றாவதாக, 1 கொரிந்தியர் 14:7, 8ம் வசனங்களில் பவுல், சபைகூடுகைகளில் ஆராதனைக்கான செயல்முறைகள் மீதான தமது உரையாடலில், இசைக்கருவிகளின் பயன்பாட்டை மறைமுகமாக எடுத்து

உரைத்தார்:

> அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்? அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?

இருப்பினும் பவுலின் குறிப்புகள், ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதை உறுதிப் படுத்துபவையாகவோ அல்லது அங்கீகரிப்பவையாகவோ இருப்பதில்லை. இந்த விவரிப்புகள், சபைகூடுகையில் செயல்பாடுகள் புத்திகூர்மையானவையாகவே இருக்க வேண்டும் என்று செயல்விளக்கப்படுத்துபவையாகவே இருந்தன. விளக்கம் கூறுதல் இன்றி பாஷையில் பேசுதல் என்பது, உணர்ந்து அறிய இயலாத ஒரு மெட்டை இசைத்தல் அல்லது யுத்த எக்காளத்தில் தெளிவற்ற "செய்தியை" ஒலித்தல் என்பதைப் போன்றதாக உள்ளது என்று அவர் கூறினார்.

இசைக்கருவியை "உயிரற்றது" என்று பவுல் விவரித்தார் (1 கொரிந்தியார் 14:7). இந்தச் சொல்விளக்கத்தில் அவர், தேவனுடைய சொல்விளக்கத்தின் விதிகளில் அவைகள் பொருத்தமற்றவை என்று மறைமுகமாக உணர்த்துகிறாரா? பவுல் இதை வெளிப்படையாகக் கூறாதிருக்கையில், அவர் தேவாலய ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டிற்குப் பழக்கமானவராக இருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை[22] மற்றும் அவர் எவ்விடத்திலும், அது புதிய ஏற்பாட்டு சபைகூடுகைகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று உறுதிப்படுத்தவோ அல்லது கருத்துத் தெரிவிக்கவோ இல்லை.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் பாடலில் ஆராதித்தபோது, அவர்கள் இசைக்கருவிகளைத் துணைக்குப் பயன்படுத்தவில்லை. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையில் இசைக்கருவி இசையை உள்ளடக்க, வேதவசனங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த சொற்றொடராக்கத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தனர் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அது சபை நிலைநாட்டப்பட்டுப் பல நூற்றாண்டுகள் வரையிலும் அறிமுகப்படுத்தப்படாது இருந்தது - அதற்குப் பின்னரும் கூட, அது நேரெதிர்க் கருத்துக்கு ஆளானதாக இருந்தது. கடைசியில் ஏழாம் நூற்றாண்டில்தான் ஆராதனையில் இசைக்கருவிகள் அறிமுகப் படுத்தப்பட்டன, அதன் பின்பும் இரண்டாம் ஆயிரமாண்டுக்குள் வரும் வரையிலும் அது நன்கு பொதுவானதாக இருக்கவில்லை.[23]

இந்த உண்மை நிலையை எதிர்த்து நிற்கவும் ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டை நியாயப்படுத்தவும் மூன்று முதன்மை உரிமை கோருதல்கள் அளிக்கப்பட்டுள்ளன. (1) முதலாவது, தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் யூதத்துவத்தின் நடைமுறைகளில் இருந்து தங்களைத் தூரத்தில் வைத்திருக்கவும் தங்கள் சொந்த அடையாளத்துவத்தைச் செதுக்கவும் முயற்சி செய்தனர். இந்த உரிமை கோருதல், தேவாலய ஆராதனையில் இசைக்கருவி இசை உள்ளடக்கப்பட்டிருந்தது என்று உணர்ந்தறிகிறது மற்றும் இது - யூதர்களிடமிருந்து தங்கள் இணைவுகளை முறிக்க விரும்பிய - தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த

மறுத்தனர் என்று கூறுகிறது.

இது, தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் எவ்வித தெய்வீக வழிகாட்டியும் இல்லாமல் தங்கள் சுயமாதிரிகளைக் கலந்துகட்டினர் என்று யூகித்தல், வாதத்தின் இவ்வரிசையில் உள்ள பிரச்சனையாக இருக்கிறது. இதற்கு நேர்மாறாக சபைகூடுகைகளில் பாடுதலுக்குப் பயன்படுவதற்கான வெளிப்படையாக அறிவுறுத்துதலைப் பவுல் கொடுத்தார் (காண்க எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16).

முதல் நூற்றாண்டில் (அல்லது அடிமைத்தனத்திற்குப் பின்பு எந்த காலத்திலும்) இருந்த யூதர்கள், தங்களின் ஜெப ஆலய ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தவே இல்லை என்பது இன்னொரு பிரச்சனையாக உள்ளது. ஆகவே, யூதர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்தியதால், தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் அவற்றைப் பயன்படுத்தவில்லை என்று கூறுதல் சாட்சியத்திற்குப் பொருத்தமாக இருப்பதில்லை. எருசலேமில் இருந்த தேவாலயத்தில் மாத்திரமே இசைக்கருவி இசை யூதர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதால், இது விசேஷித்த வகையில் உண்மையாக உள்ளது. (பலஸ்தீனம் உட்பட) ரோமப் பேரரசு முழுவதிலும் சிதறியிருந்த ஜெப ஆலயங்களில் ஆராதனையில் இசைக்கருவி இசை பயன்படுத்தப்படவில்லை. இசைக்கருவி இல்லாத இந்த நிலையை, ரோமப்பேரரசின் குடிமக்கள், புறதெய்வ ஆராதனையில் இருந்து வித்தியாசப்பட்ட ஒன்றாகக் கண்ணோக்கி இருந்தனர், ஆனால் அது, புறஜாதியார் உலகத்திற்கு, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை யூதர்களுடன் அடையாளப்படுத்த அதிக நியாயமான காரணமாயிருந்திருக்கும்.

(2) முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனைகளில் இசைக் கருவிகளை ஏன் பயன்படுத்தவில்லை என்பதற்கான மாற்று விளக்கம் ஒன்று, யூத ஜெப ஆலயப் பின்னணியில் இருந்து எழும்புகிறது. தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையை ஜெப ஆலய ஆராதனை மாதிரியில் வடிவமைத்தனர். எபிரெயர்களில் இருந்து பெரும்பான்மையானவர்கள் தொடக்காலக் கிறிஸ்தவர்களானபடியால் இது இவ்வாறாயிற்று என்பது முன் மொழிதலாக உள்ளது.[24] மீண்டுமாக இந்த முன்மொழிதல், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கு தங்கள் ஆராதனையை, தங்கள் சுய சிந்தையின் உண்மையற்ற தன்மையின் அடிப்படையில் ஏறெடுத்தனர் மற்றும் அவர்கள் தெய்வீகக் கட்டளை எதன்மீதும் அடிப்படை கொண்டிருக்கவில்லை என்று யூகிப்பதாக உள்ளது.

(3) இன்னும் சிலர், தொடக்கால கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகள் இல்லாது இருந்தது, அவர்கள் உபத்திரவத்திற்கு உள்ளானவர்களாக இருந்தபடியால் தங்களை நோக்கிக் கவனத்தை ஈர்க்காதிருப்பதற்காகவே என்ற கருத்தில் மனநிறைவு அடைகின்றனர். இந்த சிந்தனையின் படி, உபத்திரவம் முடிந்த பின்பு, இசைக்கருவிகள் ஆராதனையில் ஏற்றுக்கொள்ள கூடிய வகையாக அறிமுகப்படுத்தப்பட்டன என்றாகிறது. இதற்கு நேர்மாறாக, ஆராதனை வடிவ மாதிரிகளும் இடைமுறைகளும் நிலைநாட்டப்பட்ட பின்பு, முதல் நூற்றாண்டின் முடிவுக்காலகட்டம் வரையிலும் சபையானது பரவலாக இருந்த உபத்திரவத்திற்கு ஆளாக இருந்ததில்லை என்று வரலாறு சுட்டிக்காண்பிக்கிறது.[25]

மேலும், ஆராதனையில் இசைக்கருவிகளின் இசையை அறிமுகப்படுத்துதல்

கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் நடைமுறைபெறவில்லை (இதற்கு முன்பு நடந்த ஒன்றிரண்டு நிகழ்வுகள் விதிவிலக்காக இருக்கலாம்), இது கிறிஸ்தவம் அலுவலகரீதியாக அங்கீகரிக்கப்ட்டு[26] ரோமப் பேரரசர்களால் பாதுகாக்கப்பட்டது தொடங்கி (குறைந்த பட்சம் கி.பி. 313ல் கான்ஸ்டன்டைன் காலவாக்கில்[27]) மூன்று நூற்றாண்டுகள் வரையிலும் நடைபெறவில்லை. தொடக்ககால சபையில் இசைக்கருவிகள் இல்லாத நிலை, இசையானது கண்டிப்பாக வாய்பாட்டாக, இசைக்கருவிகளின் துணையின்றி பாடப்பட்டது என்பதற்கான “வாய்ப்பாட்டு” என்ற சொற்றொடருக்கு அடிப்படையாக உள்ளது.

இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதை அங்கீகரிக்கும் சொற்றொடர் எதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லாததே, சபையானது தங்களை நோக்கித் தேவையற்ற வகையில் கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்ப்பதற்காகவே இசைக் கருவிகளை பயன்படுத்தாமல் இருந்தது என்ற மனநிறைவின் இன்னொரு பலவீனமாக உள்ளது. அப்படிப்பட்ட சொற்றொடர் ஏதாவது புதிய ஏற்பாட்டில் இருந்திருக்கும் என்றால், மேற்கண்ட விவாத வரிசையானது சற்றே வலிவைப் பெற்றிருக்கும், ஆனால் அப்படிப்பட்ட ஆதாரம் எதுவும் இல்லாத நிலையில், அவைகள் நம்பி ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவையாக இருப்பதில்லை.

தேவனுடைய வசனத்தை மாற்றுதல் குறித்து எச்சரிக்கைகள், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய மற்றொரு முன்னெச்சரிக்கை அம்சமாக உள்ளது. இந்தக் கூற்றுகள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் காணப்படுகின்றன.

இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்க இருக்கையில், மோசே அவர்களுக்கு, தேவன் கட்டளையிட்டிருந்த “வசனத்துடன்” ஒன்றையும் கூட்ட வேண்டாம் என்று எச்சரித்தார் (உபாகமம் 4:1, 2). நீதிமொழிகள் புத்தகத்தில் உள்ள ஒரு வசனப்பகுதி இதேபோன்று புத்திகூறுகிறது:

> தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்;
> தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்.
> அவருடைய வசனங்களோடு ஒன்றையும்கூட்டாதே,
> கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்ளுவார்,
> நீ பொய்யனாவாய் (30:5, 6).

புதிய ஏற்பாட்டில் யோவான் பின்வருமாறு எச்சரித்தார்:

> இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19).[28]

கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், இரட்சிக்கக் கூடாத ஒன்றைக் கொண்டு சுவிசேஷத்தைக் கலப்படம் செய்துவிட வேண்டாம் என்று பவுல்

எச்சரித்தார்:

> உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்பிகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப்புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (1:6-9).

சிலர், இவ்வசனப்பகுதிகள், ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுதல் பற்றிக் குறிப்பிடுவதில்லையே என்று விவாதித்துள்ளனர், ஆனால் அப்படிப்பட்ட ஒரு அறிவித்தல் வேத வசனங்களில் இருந்து செயல்படுத்தப்பட வேண்டும். இந்தக்கூற்றுகள், தேவனுடைய வசனத்துடன் ஒன்றையும் கூட்டாமலும் அதிலிருந்து ஒன்றையும் குறைத்து விடாமலும் இருக்கும்படி எச்சரிக்கின்றன.

தேவனுடைய பிரசன்னத்திற்குள் நாம் எவ்வாறு வருகிறோம் என்பது பற்றிக் குறிப்பாக அவர் அக்கறையாகயிருப்பதாகக் காணப்படுகிறார். நமது வேண்டுதலிகளின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நெறிமுறைகளை அவர் கொடுத்துள்ளார். கண்டிப்பான வகையில் மனிதக் கண்ணோக்கில் இருந்து ஆழ்ந்து சிந்தித்தால், இந்த விஷயங்களில் சில நமக்கு விசித்திரமானவைகளாக காணப்படலாம். நாம் காணுகிற அதே வழியில் தேவன் விஷயங்களைக் காண்பதில்லை என்பதால், அவரது நெறிமுறைகளுக்கு கவனம் செலுத்துதல் முக்கியமானதாக உள்ளது.

1 கொரிந்தியர் 10ம் அதிகாரத்தில் பவுல், பழைய ஏற்பாட்டில் மக்களுக்கு நடந்தவை, அவர்களின் பாவம் நிறைந்த தன்மையைப்போலச்செய்யாதபடிக்கு, நமக்கு உதாரணமாகப் பயன்படுகின்றன என்று குறிப்பிட்டார். ஆகவே, தேவன் தாம் விரும்பியிராத வழிகளில் தம்மை அணுகியவர்களுடன் எவ்வாறு செயல்பட்டார் என்று காண்பது அறிவுறுத்துவதாக உள்ளது.

தேவனால் அங்கீகரிக்கப்பட்டிராத ஆதாரமூலத்தில் இருந்து அக்கினியைப் பயன்படுத்தி, தூபம் காண்பித்த நாதாப் மற்றும் அபியூ ஆகியோருக்கான, தமது தண்டனையில் மிகவும் கடுமையாக இருந்தார் (லேவியராகமம் 10:1, 2). வேதாகமம் “அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்” என்று கூறுகிறது. இந்தக் கடுமையான அளவுக்கு தேவன் லேவியராகமம் 10:3ல் கொடுத்த காரணம், அவரது பரிசுத்தம் பற்றி அக்கறை கொண்டுள்ளது: “… என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் …” தேவன் பரிசுத்தமானவராகக் கருதப்பட்டு அவர் குறிப்பிட்டுள்ள வழியில்

அணுகப்பட வேண்டும். ஆரோனின் மகன்கள் புதுமையான வழிகளைக் கண்டு பிடிப்பவர்களாக இருக்க உரிமை கொண்டிருக்கவில்லை.

கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப்பதிலாக அதை அடித்ததால் மோசே கானான் தேசத்திற்குள் செல்லாது தவிர்க்கப்பட்ட விஷயமானது, அப்படிப்பட்ட "சிறிய" மீறுதலுக்காகத் தரப்பட்டது மிகவும் கடுமையான தண்டனையாக காணப்படுகிறது (எண்ணாகமம் 20:2-13), ஆனால் தேவன் "இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி" நடந்துகொள்ளத் தவறிய வட்டாரத்தில் அந்தத் தண்டனையை வைத்தார் (வசனம் 12).

உசியா (அசரியா) என்ற அரசர், கர்த்தருக்குத் தூபம் காட்டுதல் அவருக்கு அடுத்ததாக இராத போதிலும் அதைச் செய்யத் துணிந்தபடியால், அவருக்குத் தரப்பட்ட கடுமையான தண்டனை பழைய ஏற்பாட்டில் இன்னொரு உதாரண மாக உள்ளது. தேவன் அவரை அடிக்க, அவர் தொழுநோயாளி ஆனார், அது அவர் தம் வாழ்நாள் முழுவதிலும் தனிப்பட்ட வீட்டில் அடைந்து கிடக்கக் காரணம் ஆயிற்று (2 நாளாகமம் 26:16-21).

புதிய ஏற்பாட்டில்கூட, கர்த்தருடைய பிரசன்னத்தில் முன் தப்பெண்ணத்துடன் வருதலின் அபாயத்திற்கு உதாரணம் உள்ளது. தேவனிடத்தில் பொய்யுரைத்த அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோரின் உடனடியான மரணம் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் (நடபடிகள் 5:1-11).

கர்த்தரிடத்தில் நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பது பற்றிய அவரது அக்கறையானது நமக்குத் தெளிந்த புத்தியை அளிக்க வேண்டும். நாம் பயபக்தியுடன் அவருக்கு முன்பாக வரவேண்டும்.

வெகுஜனக் கருத்திற்கு நேர் எதிராக, சடங்கு என்பது முக்கியமற்றது என்று கருத்துக் கொள்ளுதல் தவறானதாக உள்ளது. தேவனுடைய மக்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்க அவர்கள் தங்கள் செய்கைகளில் மனப்பூர்வமாய் ஈடுபடாதபோது, தேவன் அவர்கள் மீது பிரிய மற்றவர் ஆனார். பரிசேயர்களுக்கு எதிராகப் பல சாபங்களின் வரிசை ஒன்றை இயேசு கொடுத்தபோது, இப்படிப்பட்ட வெற்றுச் சடங்காச்சாரங்கள் பற்றிய தமது கவலையை அவர் வெளிப்படுத்தினார்:

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே (மத்தேயு 23:23).

சபையில் சிலர், இவ்வசனப்பகுதியை கண்ணோக்கி, நீதி, இரக்கம் மற்றும் விசுவாசம் ஆகியவை நடைமுறைப் படுத்தப் படுகிறவரையில் உபதேச விஷயங்கள் (உதாரணமாக, சபை நிறுவன அமைப்பு, ஞானஸ்நானம் மற்றும் வாய்ப்பாட்டு போன்றவை) முக்கியமற்றவையாக உள்ளன என்று நிச்சயப்படுத்துகின்றனர். இருப்பினும், நீதி, இரக்கம் மற்றும் விசுவாசத்துடன் *கூடுதலாக* சடங்கும் முக்கியமானதாக இருக்கிறது என்று இயேசு குறிப்பிட்டார் என்பது வெகுவாக கண்ணோக்காமல் விட்டுவிடப்படுகிறது. நாம், தேவனு

டனான உறவின் ஒரு அம்சத்தைக் கொண்டிருக்கும் வரையில் மற்றொரு அம்சத்தை விட்டுவிட முடியும் என்று இயேசு கூறவில்லை. நமது இருதயங்கள் தேவனுடைய உறவில் இல்லை என்றால் உபதேசம் மற்றும் சடங்கு ஆகியவை தகுதியற்றதாகின்றன என்பது உண்மையே; ஆனால் நமது இருதயங்கள் எங்கிருக்க வேண்டுமோ அங்கிருந்தால், உபதேசங்கள் மற்றும் சடங்குகள் ஆகியவை விசுவாசம் நிறைந்த தன்மையைக் காட்சிப்படுத்தும் வழிகள் ஆகின்றன. நீதி, இரக்கம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் பெயரால், வடிவமைப்பைப் புறக்கணிக்கும்போது, அது விசுவாசத்தை இடர்பாட்டிற்கு உள்ளாக்குகிறது, ஏனெனில் விசுவாசத்துடன் இருத்தல் என்பதை உள்ளடக்கியிருப்பவை எவை என்று தேவன் ஒருவரே விளக்கப்படுத்துகிறார்!

மலைப் பிரசங்கத்தில் இயேசு, "அந்த நாளில்" (சாத்தியமான வகையில் நியாயத்தீர்ப்பு நாள்) மக்கள் இயேசுவுடனான தங்கள் பற்றை, "கர்த்தாவே, கர்த்தாவே" என்று அவரை நோக்கி அழைப்பதன் மூலம் அறிவிப்பது பற்றிய காட்சி ஒன்றை விவரித்தார். சிலர், இயேசுவின் நாமத்தில் மனதை ஈர்க்கும் செயல்களைச் செய்திருந்தனர். இருப்பினும் இயேசு, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்" என்று அறிவித்தார் (மத்தேயு 7:23). அவர்கள் அடிப்படைக் கீழ்ப்படிதலைச் செயல்விளக்கப்படுத்த மறுத்த காரணத்தால், அவரிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டனர் என்பது உறுதி!

நாம் ஒப்புக்கொள்கிற விஷயங்களில் மாத்திரம் இயேசுவுக்குக் கீழ்ப்படியும்போது, உண்மையான கர்த்தத்துவம் இருப்பதில்லை. அது உண்மையில் ஒரு அறைகூவலே அல்ல. அதற்குப் பதிலாக, சிலவற்றைச்செய்ய வேண்டும் என்று இயேசு ஏன் கேட்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளாது இருக்கும்போதுகூட அல்லது அந்தக் கேட்புடன் நாம் கருத்தொருமைப் பட்டிருத்தல் அவசியமில்லை என்ற நிலையிலும்கூட, நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போதுதான் இயேசுவின் கர்த்தத்துவம் அதற்கு இருக்கிறது. "உண்மையில் யார் பொறுப்பாளராக இருக்கிறார்?" என்பதே கர்த்தத்துவத்தின் கேள்வியாக உள்ளது.

சில வேளைகளில், அன்பு, பரிவு, தயவு, நீதி மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மீதான போதனையை அசட்டை பண்ணும் அளவுக்கு, உபதேசக் கேள்விகள் மீது மிக அதிக வலியுறுத்தம் வைக்கப்பட்டிருப்பதை நான் மறுக்கமாட்டேன். சில உபதேசக் கேள்விகள், மதக்குழுக்களுக்கு இடையில் எல்லையை வரையறுத்தலின் முதன்மை கோடுகளை வரைவதால், தேவனை விசுவாசிப்பவர்கள் ஒருமைப்பாட்டிற்கு ஒரு அடிப்படையை எவ்வாறு கண்டறிய முடியும் என்று காண்பிக்கும் முயற்சியில் நாம் இந்தப் பிரச்சனைகளை எடுத்துரைத்தோம். (இது "கிறிஸ்தவ" உலகத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களில் ஒன்றாக உள்ளது.[29])

ஒரு குழுவானது சில விஷயங்ளைச்செய்கிறது என்றும் இன்னொரு குழு அவற்றைச் செய்வது இல்லை என்றும் வாதிடுவதில் உள்ளாக ஒரு அபாயம் நிலவுகிறது. உபதேச மற்றும் சடங்கு தொடர்பான விஷயங்கள் இரண்டில் ஒன்றைச் தேர்ந்தெடுக்க வேண்டிய ("ஆம் அல்லது இல்லை") விஷயங்களாக உள்ளன. நாம் அவற்றைச் செய்கிறோம் அல்லது செய்யாதிருக்கிறோம்; நாம் அதை விசுவாசிக்கிறோம், அல்லது விசுவாசிப்பதில்லை. இதற்கு நேர்மாறாக,

அன்பு, நீதி, இரக்கம் மற்றும் தயவு ஆகியவை ஒப்புமை (சார்பளவு) விஷயங்களாக உள்ளன: அவற்றை நாம் வேறுபட்ட அளவுகளில் கொண்டிருக்கிறோம். அவைகள் வளர்ச்சி மற்றும் பக்குவமடைதலை உள்ளடக்கி இருக்கின்றன; அவைகள் தேவனுடைய பிள்ளைகள் யாவரும் தொடர்ந்து வளரவும் பக்குவ மடையவும் வேண்டிய பகுதிகளாக உள்ளன (உதாரணமாக, 2 பேதுரு 1:5-8 ஐக் காணவும்).[30] ஒரு நபர் அல்லது ஒரு குழு, ஒப்புமை (சார்பளவு) விஷயங்களை ஆதரிப்பதற்காக, இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய விஷயத்தை (ஒரு கருத்தில் இவை அடையாளம் காண்பதற்கு மிகவும் சுலபமான விஷயங்களாக உள்ளன) புறக்கணிக்கத் தேர்ந்துகொள்ளும்போது, அது எச்சரிப்புத் தருவதாக/கலவரம் ஏற்படுத்துவதாக/கவலை அளிப்பதாக உள்ளது. இவை இரண்டுமே முக்கியமானவைாக உள்ளன என்று இயேசு உறுதிப்படுத்தினார் (காண்க மத்தேயு 7:21-23 மற்றும் 23:23). ஒப்புமை ஒழுக்க நெறிகளில் அதிகம் முன்னேற்றம் கண்டுள்ளதாக உணர்ந்தறியப்படும் ஒரு குழுவை ஆதரிப்பதற்காக, உபதேசரீதியாக ஆரோக்கியமாக இருக்க முயற்சிக்கும் ஒரு குழுவை விட்டு விலகுவதற்கு எதிராக நான் தீவிரமாக எச்சரிக்கை செய்வேன்.

நாம் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் எப்போதுமே உள்ளன மற்றும் பாவமாக இருப்பதால் நாம் தவிர்க்க வேண்டிய விஷயங்களும் எப்போதுமே உள்ளன. வழக்கமான பாவம் நிறைந்த நடத்தை நமது ஆவிக்குரிய இழப்பை விளைவிக்கும் (காண்க கலாத்தியர் 5:19-21). மேலும் நாம், தேவனுடைய பிள்ளைகளாவதற்குத் தேவைப்படுகிற அடிப்படைக் கீழ்ப்படிதல் போன்ற நேர்மறையான விஷயங்ளையும் செய்ய வேண்டியுள்ளது (காண்க 2 தெசலோனிக்கேயர் 1:7-9). நாம், "கிறிஸ்தவ கிருபைகள்" என்று அழைக்கப்படும் விஷயங்கள் மூலமாக (காண்க 2 பேதுரு 1:5-8) கிறிஸ்துவின் சாயலுக்குள் பக்குவம் அடைய வேண்டும். சட்டதிட்டங்கள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றில் இருந்து நாம் முற்றிலும் விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம் என்று நாம் யூகித்துக்கொண்டால் நம்மை நாமே வஞ்சித்துக் கொள்பவர்களாவும் உண்மைநிலையில் நம்மை நாம் சாத்தானுடைய வழிகளுக்கு ஒப்புக் கொடுப்பவர்களாகவும் இருப்போம் (காண்க ரோமர் 6:1-14).[31]

கிறிஸ்தவர்கள் சபையின் ஆராதனைகூடுகைகளில் வாய்ப்பாட்டையே பாட வேண்டும் என்ற வலியுறுத்தத்திற்கு மறுப்புரைகள் ஏற்படுத்தப்படுதல் என்பது தவிர்க்க இயலாதது. இவற்றில் ஆறு மறுப்புரைகள் பற்றி இங்கு நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மறுப்புரை 1: "இது தடைசெய்யப்பட்டிருப்பதில்லை." புதிய ஏற்பாட்டில் இசைக் கருவிகளின் இசை கண்டனம் பண்ணப்பட்டு இருப்பதில்லை என்பது ஒரு மறுப்புரையாக உள்ளது. இது வெளிப்படையான சொற்றொடர்கள் பற்றிய விஷயத்தில் உண்மையானதாகவே உள்ளது. இருப்பினும் பகுதியில் உற்று நோக்குதல் என்பது, மொழியின் இயல்பு பற்றிய புரிந்துகொள்ளுதலில் குறைவுபடுதலைப் பிரதிபலிக்கிறது. மொழி என்பது உள்ளடக்கப்பட்டவை மற்றும் தவிர்க்கப்பட்டவை என்பவற்றின் கருத்துக்களைக் கொண்டிருக்க முயற்சி செய்கிறது. ஃபோர்டு கார் ஒன்றை வாங்க ஒரு நபர் கேட்பாணை கொடுக்கிறார் என்றால், கார் விற்பனையாளர், அதற்குப் பதிலாக செவர்லே காரைத் தருவதற்கு எவ்வித உரிமையும் இல்லாதவராகிறார். வாகனத்தின் வகை பற்றிய நேர்மறைக் கூற்றானது மற்ற மாற்றுகள் எல்லாவற்றையும் தானாகவே

தவிர்க்கிறது. சிலர் இந்தக் கொள்கையைப் பற்றி மழுப்பலாகப் பேசுபவர்களாக இருக்கலாம், ஆனால் தேவனுடைய வசனத்துடன் ஒன்றைக் கூட்டுதல் அல்லது அதிலிருந்து ஒன்றைக் குறைத்தல் பற்றிய தேவனுடைய எச்சரிக்கைளை ஆழ்ந்து சிந்திக்கும்போதும், தங்கள் அணுகுமுறைகளில் புதிய கண்டுபிடிப்பாளர்கள் ஆனவர்களை தேவன் தண்டித்ததற்கான உதாரணங்களின் தொடர்பாகக் காணும்போதும், இந்தக் கொள்கை தனிச்சிறப்பு மிக்கதாகிறது. நாதாப் ம ற்றும் அபியூ ஆகியோரின் உதாரணத்தில் (லேவியராகமம் 10), மற்ற இடத்தில் இருந்து அக்கினியை எடுப்பதில் அவர்களைத் தடைசெய்த கூற்று எதுவும் இருக்கவில்லை.

[தடைசெய்யப்பட்டவை யாவற்றையும் எடுத்துரைத்தால்] வேதாகமம் எவ்வளவு பெரிய தொகுப்பாகி இருக்கும் என்ற மறைவான கருத்து, இதன் இன்னொரு தவறாக உள்ளது. ஆராதனையில் தேவன் விரும்பாத ஒவ்வொரு விஷயத்தையும் தடைசெய்யும் குறிப்புகளைத் தருவதாக இருந்தால், வேதாகமம் சலிப்புள்ள புத்தகமாக (ஏறக்குறைய பல தொகுப்புகளாக இருப்பது நிச்சயம்) இருந்திருக்கும், அதை முழுவதும் வாசிப்பதை யாரும் விரும்பியிருக்கமாட்டார்கள், மற்றும் அதில் நிபுணத்துவம் பெற்றவராயிருக்க எவருமே விரும்பியிருக்க மாட்டார்கள். நமது அறிவுறுத்துதலுக்காகத் தேவன் பாதுகாத்து வைக்கும்படித் தேர்ந்து கொண்டுள்ள குறைவான அளவுள்ள விஷயத்தில் நிபுணத்துவம் பெறுவதிலேயே மக்கள் போதிய பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு.

தேவன் ஆராதனையில் இருக்கும்படி விரும்பாது தவிர்த்த ஒவ்வொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்கப் பட்டால், அந்தத் தகவலில் அதிகமானவை தொடக்ககாலத் தலைமுறையினருக்கு அர்த்தம் இல்லாதவைகளாக இருந்திருக்கும். உதாரணமாக, ஒருநாளில் மக்கள் தங்கள் ஆராதனைச் செயல்முறைகளில் பங்கேற்க இயந்திர மனிதன் ஒன்றைக் கொண்டு முயற்சி செய்வார்கள் என்பதால், ஆராதனையில் இயந்திர மனிதனைப் பயன்படுத்துவதை அவர் தடைசெய்து இருப்பார்.[32] தேவன் தாம் விரும்பியது எவை என்பவற்றை உரைத்து, தமது வசனத்துடன் கூட்டுவதை தடைசெய்து, செய்தித்தொடர்பில் மிகவும் அதிகச் செயல்விளைவுள்ள வழியைத் தேர்ந்துகொண்டார்.

ஆபிரகாமிடத்தில் தேவன், விருத்தசேதனம் என்பது என்றென்றைக்கு மான உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கும் என்று அறிவித்தார் (ஆதி யாகமம் 17:9-14). ஆனால் இந்த அடையாளமானது தேவனுடன் ஒருவருக்குள்ள உறவுடன், இனியும் எவ்வகையிலும் தொடர்புடையதாக இருப்பதில்லை என்று பவுல் சுட்டிக்காண்பித்தார். ஒருவர் விருத்தசேதனம் செய்துகொண்டால், அவர் நியாயப்பிரமாணம் முழுமையும் கைக்கொள்ள கட்டுவிக்கப்பட்டிருக்கிறார், இது அவர் கிறிஸ்துவிடத்தில் இருந்து துண்டிக்கப் படக் காரணமாகும் என்றுகூட அவர் உரைத்தார் (காண்க கலாத்தியர் 5:1-6). விருத்தசேதனம் என்பது உபதேசரீதியான போராட்டத்தின் விஷயமாகும் வரையிலும், அது குறிப்பாகத் தவிர்க்கப்பட்டிருக்கவில்லை (நடபடிகள் 15).

இசைக்கருவி இசையானது கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலும் ஒரு பிரச்சனையாகவில்லை என்பதால், புதிய ஏற்பாட்டில் இசைக்கருவிகளைக் குறிப்பாக தவிர்த்தலை எதிர்பார்த்தல் உண்மை நிலைக்கு மாறானதாக

உள்ளது. விருத்தசேதனப் பிரச்சனை முன்னெச்சரிக்கை மற்றும் அறிவுறுத்தல் ஆகியவற்றின் உதாரணமாகச் செயல்படுகிறது.

எனது அறிவுக்கு எட்டிய வரையில், கர்த்தருக்கு மிருகபலிகளைக் கொண்டுவருதலுக்கு எதிராக வெளிப்படையான தடையெதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லை. இருப்பினும், பலிமுறைமையை இயேசு நிறைவேற்றி முடித்து வைத்தபடியால், கர்த்தருக்கு மிருகபலியைச் செலுத்துதல் என்பது சட்டவிரோதமாக இருக்கும். புதிய ஏற்பாட்டின்கீழ், கிறிஸ்தவர்களின் பலிகள் உருவக நடையில் குறைந்த பட்சம் பின்வரும் இரு வழிகளில் சொல்விளக்கப்படுத்தப்படுகின்றன: நமது உதடுகளின் ஸ்தோத்திரம் (எபிரெயர் 13:15) மற்றும் அவரது ஊழியத்திற்கென்று நமது வாழ்வைக் கொடுத்தல் (ரோமர் 12:1, 2).

அதேபோன்று, தூபங்காட்டுதல் என்பது பழைய ஏற்பாட்டு ஆராதனையில் உள்ளான பாகமாக இருந்தது என்றாலும் (யாத்திராகமம் 30), ஆராதனையில் தூபவர்க்கத்தைப் பயன்படுத்துதலுக்கு எதிரான தடையெதுவும் இருப்ப தில்லை.[33] இருப்பினும் பெரும்பான்மையான மக்கள், அப்படிப்பட்ட நுட்பத்தை ஆராதனையில் பயன்படுத்துதல் ஏற்புடையதல்ல என்பதைப் புரிந்துகொண்டுள்ளனர். சொல்லப்போனால், கிறிஸ்தவர்களின் ஜெபங்களே தேவனை நோக்கி மேலே செல்லும் தூபவர்க்கம் என்று உருவக நடையில் வேதாகமம் குறிப்பிடுகிறது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 5:8).

மறுப்புரை 2: *"அது ஆராதனைக்கு ஒரு உதவியாக உள்ளது."* இந்த விவாதமானது, இசைக்கருவிகளின் பயன்பாட்டை பாடல் புத்தகங்கள் மற்றும் ஆராதனையில் பயன்படுத்தப்படும் பிற பொருட்கள் ஆகியவற்றின் இருப்புடன் சமானப்படுத்த வழக்கமாக முயற்சி செய்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், M. C. கர்ஃபீஸ் என்பவர், பொதுவான மற்றும் குறிப்பான கட்டளைகளுக்கு இடையில் பிரச்சனை உள்ளது என்று சுட்டிக்காண்பித்தார்.[34] புதிய ஏற்பாட்டில் கர்த்தர், "இசை அமையுங்கள்" (அல்லது அதற்குச் சமமான சில வார்த்தைகள்) என்று கூறாமல், குறிப்பாக, பாடும்படி கூறினார். இசை அமைத்தல் என்பது, பாடுதல் மற்றும் இசைக்கருவிகள் பயன்படுத்துதல் உட்பட, பல வழிகளில் செய்யப்பட முடியும். ஒரு பாடல் புத்தகம் என்பது "இசை அமைப்பது" இல்லை, ஆனால் அது ஒரு உதவிப் பொருளாகவே உள்ளது.

மறுப்புரை 3: "சபைக் கட்டிடங்களுக்கு அதிகாரத்துவம் எதுவும் இல்லை." தொடக்ககால சபை, கட்டிடங்களைக் கொண்டிருந்தது என்பதற்கான குறிப்புகள் எதையும் நாம் கொண்டிருக்காது இருக்கையில், உறுப்பினர்கள் ஒன்றுகூட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர், இதில் ஒன்றுகூட ஒரு இடம் இருப்பதற்கான மறைமுகமான தேவை உள்ளது. தொடக்ககால சபையானது, எருசலேம் தேவாலயத்தில் இருந்த சாலொமோன் மண்டபம்[35] (நடபடிகள் 3:11; 5:12), தனிப்பட்ட வீடுகள் (பிலேமோன் 2; கொலோசெயர் 4:15; ரோமர் 16:5), ஆற்றங்கரையோரம் (நடபடிகள் 16:13) மற்றும் எபேசுவில் இருந்த பள்ளிக்கூடம் (நடபடிகள் 19:9) ஆகிய இடங்களில் ஒன்றுகூடி வந்தது. ஏதேனும் ஒரு இடம் தேவையாக உள்ளது, மற்றும் கிறிஸ்தவர்கள் எங்கு ஒன்றுகூடினர் என்பதற்குப் புதிய ஏற்பாட்டு மாதிரி எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.[36] சபை கூடிவரும் இடம் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை, ஆனால் ஆராதனையில் இசைக்கருவி இசையை அறிமுகப்படுத்துவதற்கு இதை

ஒரு விவாதமாக அளித்தல் என்பது, இசைக்கருவியைப் பயன்படுத்துவதற்கான வேண்டுகோள் பலவீனமாக உள்ளது என்பதை செயல்விளக்கப்படுத்துகிறது.

சபைக்கட்டிடங்களைப் பயன்படுத்துதல் என்பது தவறாக இருந்தது என்றால், [வழக்கத்தில் உள்ள] ஒரு நடைமுறை தவறாக இருக்கலாம் என்பதற்காக, தவறான வேறொரு நடைமுறையை அறிமுகப்படுத்துதலை நியாயப்படுத்துதல் என்பது, வேதவாக்கியங்கள் தகுதியற்றதாக அல்லது இன்னொரு தவறை நியாயப்படுத்துவதில்லை; அது நல்ல கருத்தறிவு ஒன்றை ஏற்படுத்துவதில்லை. கர்த்தருடைய அறிவுறுத்துதலை நம்மால் இயன்ற அளவுக்கு நெருக்கமாகப் பின்பற்ற முயற்சி செய்து அவரது சித்தத்திற்கு மிகநெருக்கமான இசைவிணக்கத்தில் நமது நடைமுறையை நேர்த்தி செய்தல் என்பது அதிக நியாயமானதாக இருப்பதில்லையா?

மறுப்புரை 4: *"நாம் நமது தாலந்துகள் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்த வேண்டாமா?"* இந்தக் கேள்விக்கு - அந்தத் தாலந்து தேவனுடைய சித்தத்திற்கு நேர்மாறாகப் பயன்படுத்தப்படாத வரைக்கும் - "ஆம்" என்பதே பதிலாக உள்ளது. வாதத்தின் இவ்வரிசையில், ஒரு நபரின் தாலந்து என்பது ஆராதனையில் அறிமுகப்படுத்தச் சட்டப்பூர்வமான விஷயமாக இருக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வோமாக. "தேவனுடைய மகிமைக்காக" என்பதும் "சபை கூடுகையில் ஆராதனை" என்பதும் இரண்டு விஷயங்கள்.

மத உலகத்தில் வளர்ந்து வரும் ஒரு பகுதியானது, வாழ்வில் நாம் செய்கிற ஒவ்வொரு விஷயமுமே ஆராதனைதான் என்று விவாதிக்கிறது. இந்த விவாதமானது, ரோமர் 12:1ல் பவுலின் பின்வரும் புத்திமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." "ஆராதனை" என்ற வார்த்தையைப் பவுல் பயன்படுத்தியுள்ளதன் மீது கவனக்குவிப்பு உள்ளது. வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு விஷயமும் ஏதாவது ஒரு வகையில் ஆராதனையுடன் தொடர்புடையதாக உள்ளது என்பதே அவரது மறைவான கருத்தாக இங்குள்ளது, ஆனால் வாழ்வில் உள்ள ஒவ்வொரு விஷயமும், முறையான சபைகூடுகையில் அறிமுகப்படுத்தத் தகுதியானதாக இருப்பதில்லை என்பதை உற்றுக் கவனித்தல் முக்கியமானதாக உள்ளது.

உணவை உண்ணுதல் என்பது சபைகூடுகையின் பாகமாக இருக்கக் கூடாது என்று பவுல், கொரிந்தியர்களுக்கு சுட்டிக்காண்பித்தார் (1 கொரிந்தியர் 11:25). எனவே சமைப்பதில் தாலந்தைக் கொண்ட ஒரு செயல், தேவனுடைய ஆராதனை சபைகூடுகையில், ஒரு உணவைச சமைத்தல் அல்லது உண்ணுதல் என்பதை அறிமுகப்படுத்துதலைச் சட்டப்பூர்வமாகச் செய்வதில்லை, இருந்தபோதிலும், இந்தத் தாலந்தானது - தேவையில் இருப்பவர்களுக்கு உணவுகளை எடுத்துச் செல்லுதல் மற்றும் கர்த்தருடைய நாமத்திலே அவ்வாறு செய்தல் என்பவற்றினால் - தேவனுடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்தும் வகையில் பயன்படுத்தப்படமுடியும் (காண்க கொலோசெயர் 3:17).

அதேபோன்று, சபைகூடுகைகளில் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று பவுல் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 14:34).

பல பெண்மணிகள் போதிக்கும் தாலத்தைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு; ஆனால் என்ன காரணத்தினாலோ, சபைகூடுகைகளில் போதித்தலைக் கர்த்தர் ஆண்களுக்கு மட்டும் வரையறைப் படுத்தியிருக்கிறார்.[37] சில வழிமுறையில், பிரிசில்லாள் சபைகூடுகைக்கு வெளியில், அப்பொல்லோவுக்கு அறிவுறுத்தலில் ஈடுபட்டாள், அந்த நடவடிக்கையைக் கண்டனம் செய்தமைக்கான ஆதாரம் எதுவும் இல்லை (காண்க நடபடிகள் 18:24-28).

இசைக்கருவிகளை மீட்டுவதற்கு ஒரு நபர் கொண்டுள்ள திறன் என்பது மக்களை மகிழ்விக்கவும் மக்கள் தேவனுடைய உபதேசங்களுக்கு ஏற்புடைய வகையில் நல்வாழ்வு வாழ அவர்களை ஊக்குவிக்கவும் நன்மைதரும் வகையில் பயன்படுத்தப்பட முடியும். இருப்பினும் அது, முறையான சபை கூடுகைகளில் இசைக்கருவி இசையை அறிமுகப்படுத்துதலைச் சட்டப்பூர்வமாக்குவதில்லை. நமது வாழ்வானது அன்றாடம் தேவனுக்குப் பலியாகவும் காணிக்கையாகவும் செலுத்தப்படும் வகையில், நாம் நமது வாழ்வில் செய்யும் ஒவ்வொரு விஷயமும் தேவனுடைய சித்தத்தின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பது, ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் கருத்தாக உள்ளது. இருப்பினும் அந்தக் கூற்றானது, வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு விஷயமும் முறையான சபைகூடுகைக்குத் தகுதியானதாக உள்ளது என்று முடிவு செய்வதில் இருந்து மிகத்தொலைவில் உள்ளது.

மறுப்புரை 5: *''ஆராதனையில் இசைக்கருவிகளின் இசை [பயன்படுத்தப்படுதல்] என்பது இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதில்லை.''* இந்த மறுப்புரையானது கேள்வியை கெஞ்சுகிறது; அதாவது, இது நிரூபிக்கப்பட வேண்டிய ஆய்வு ஒன்றை மாத்திரமே மறுபடி எடுத்துரைக்கிறது. இந்த அக்கறை பொருத்தமற்றதாக உள்ளது என்று நம்புதல் மாத்திரம் இதை அவ்வாறு ஏற்படுத்துவதில்லை.

தேவன் விஷயங்களை நாம் பார்க்கிறபடி பார்ப்பதில்லை என்பதால், முறையான சபைகூடுகையின் விசேஷித்த தருணங்களில் அவருடைய பிரசன்னத்திற்குள் நாம் வரும்போது, நாம் என்ன செய்கிறோம் என்பதைக் கவனத்துடன் ஆழ்ந்து சிந்தித்தல் வலிவார்ந்த வகையில் முக்கியமானதாக உள்ளது. இசைக்கருவி இசை என்பது "இரட்சிப்பு தொடர்பான பிரச்சனையாக" உள்ளதா இல்லையா என்பது உறுதியாக எனக்குத் தெரியாது, ஆனால் அதைப் பயன்படுத்தப் புதிய ஏற்பாட்டில் நமக்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பது எனக்குத் தெரியும்.

மறுப்புரை 6: *"இதை நாம் பிரிவினையின் பிரச்சனையாக ஏன் ஏற்படுத்த வேண்டும்?''* ஏனென்றால் சொற்கலை வளம், வரலாற்றின் கனம் மற்றும் முன்னுதாரணங்கள் ஆகியவை, தொடக்ககால சபையில் இசைக்கருவிகள் இருந்தது இல்லை என்று சுட்டிக்காண்பிக்கின்றன, எனவே இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தியவர்களே பிரிவினையை உண்டாக்கியவர்களாக உள்ளனர். இசைக்கருவிகள் இன்றியே தக்கவகையிலும் ஏற்புடைய வகையிலும் ஆராதிக்க முடியும் என்பதை ஒப்புக்கொள்ள இயலாத மக்கள் உள்ள இடம் என்று ஒன்று இருப்பதாக நான் அறிந்திருப்பதில்லை.

சிலவற்றை மாற்றுபவர்கள் அதன் மாற்றத்திற்கான நேர்மறையான விஷயங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது விவாதம் செய்வதற்கான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக உள்ளது, மற்றும் புதிய

ஏற்பாட்டில் இசைக்கருவி இசைக்கான விஷயத்திற்குப் பின்னால் ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. மிக சமீப காலம் வரையிலும் இசைக்கருவியானது ஆராதனையில் இருந்து விலக்கப்பட்டு இருந்தது என்று வரலாறு காண்பிக்கிறது. முன்பு பாடல்கள் வாய்ப்பாட்டாகப் பாடப்பட்டு, பின்பு இசைக்கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்ட சபைக் குழுமங்கள் எல்லாவற்றிலும், பிரிவினை விளைந்துள்ளது.

என்னுடன் இந்தப் படிப்பில் ஈடுபட்டதற்காக நன்றி. தரப்பட்டுள்ள உண்மைகளை நாம் ஆழ்ந்து சிந்தித்துள்ள நிலையில், புதிய ஏற்பாட்டின் யுகத்தில் ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுதல் என்பதைத் தேவன் விரும்புவதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மக்கள் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பியிருந்தால், அது ஏற்புடையதாக இருந்தது என்று, தவறாகப் புரிந்துகொள்வதற்கு இடமில்லாத வழிமுறைகளில், அவர் சுட்டிக்காண்பித்திருக்க முடியும். இருப்பினும், வாய்ப்பாட்டில் பாடுதல் என்பது முற்றிலும் சட்டப்பூர்வமானதாகவும் தேவனுடைய மக்களின் சபைகூடுகைக்குத் தகுதியான இசை வெளிப்பாடாகவும் உள்ளது என்பது தெளிவு. இசைக்கருவிகளை அறிமுகப்படுத்துதல் என்பது கலங்கலான தண்ணீருக்குள் பாய்வதாக உள்ளது. இது தேவனுடைய மக்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்துவது மட்டுமின்றி, பேரழிவுக்கான விளைவுகளையும் கொண்டுள்ளது.

---

குறிப்புகள்

[1]பாஷைகளில் பேசுதல் என்பது தவறாகப் பயன்படுத்தப்படுதல் பற்றிப் பவுல் எடுத்துரைத்த போது, அவர் தம்மால் எழுதப்பட்ட வார்த்தையைக் கொரிந்தியர்கள் இவ்வகையில் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தார்: "ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்" (1 கொரிந்தியர் 14:37). பவுல் எழுதிய ஏவுதல் பெற்ற வார்த்தையானது, சபைகூடுகையில் நடத்தையைச் சரிப்படுத்தும் வழிகாட்டியாகப் பணியாற்ற வேண்டியிருந்தது. [2]இவ்வார்த்தையானது "எச்சரித்தல்" அல்லது "அறிவுறுத்துதல்" என்றும் தரவழைக்கப்படலாம். (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 546.) [3]இவ்வசனப்பகுதியில் உள்ள கிரேக்க வேர் வார்த்தையானது சில வேளைகளில் "கிருபை" மற்றும் "நன்றி உணர்வு" என்று தரவழைக்கப்பட்டுள்ளது, ஆனால் இது "நன்றிகள்" என்றும் அர்த்தப்படுகிறது (Ibid., 885-87). [4]இயேசு புறஜாதியாருக்கு நேர்முக அர்த்தத்தில் பாடவில்லை என்பதால், இது "பாடுதல்" என்பதன் ஒப்புவமைப் பயன்பாடாக இருக்கலாம். [5]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977]. தாயெர் மற்றும் அர்ன்டிட் ஆகியோரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட புத்தகமும், பாவரின் அகராதியை கிங்கிரிச் மறு பதிப்புச் செய்த புத்தகமும் புதிய ஏற்பாட்டுப் படிப்புகளுக்கு உதவி செய்யும் கிரேக்க ஆங்கில அகராதியின் தரமான ஆதாரமுலங்களாக உள்ளன. அவைகள் பழங்கால கிரேக்க மொழியில் முழுநாள்வரிசை

*அளவில் வார்த்தைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டிலும் அவைகள் புதிய ஏற்பாட்டில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதைக் குறித்து அதிக அக்கறை கொண்டுள்ளன. கிரேக்க மொழியின் பெரிதான கால அளவுக்கு* Henry George Liddell and Robert Scott, *A Greek-English Lexicon,* ed. E. A. Barber (Oxford: Oxford University Press, 1968) *என்ற புத்தகம் தரமான குறிப்பு நூலாக உள்ளது.* [6]Bauer, 18. [7]Thayer, 637. [8]Bauer, 844. [9]Thayer, 675. [10]Bauer, 899.

[11]*இவ்விடத்தில் கிரேக்க மொழிச்சொல்லின் கட்டமைப்பானது இடத்தை அல்லது கருவியைக் குறிப்பிடுவதாகப் புரிந்துகொண்டிருத்தல் சட்டப்பூர்வமானதாக இருக்கலாம்.* (H. E. Dana and Julius R. Mantey, *A Manual Grammar of the Greek New Testament* [Toronto: Macmillan Co., 1955], 86-91.) *ஆகவே இது "உங்கள் இருதயங்களில்" அல்லது "உங்கள் இருதயங்களுடன்" என்று இருக்க வேண்டியதாக உள்ளது. இரு வினைச சொற்களின் இணைவு "உங்கள் இருதயங்களில் கர்த்தரை பாடி மீட்டு" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று அர்ன்டிட்டும் கிங்ரிச்சும் குறிப்பிட்டனர்* (Bauer, 18). *இன்னொரு ஆதாரமூலமானது, "இவ்வரிசை முறையில் வினைச்சொற்களின் இணைவானது பழைய ஏற்பாட்டில் [சங்கீதங்கள்] 26:6; 56:8; 104:2; 107:2 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. இன்னமும்* LXX *[செப்துவஜிந்தில்] காணப்படுகிற "கம்பிகளினால் அல்லது கம்பிகளுடன் மீட்டுதல்" என்ற நேரடிக் கருத்து, இப்போது உருவகநடையில் பயன்படுத்தப்படுகிறது* (Gerhard Delling, in *Theological Dictionary of the New Testament*, ed. G. Friedrich, trans. and G. W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972], 499). *("இப்போது" என்பது இந்தச் சந்தர்ப்பப்பொருளில் முதல் நூற்றாண்டுப் புதிய ஏற்பாட்டு யுகத்தைக் குறிக்கிறது.)* [12]*மதக் குழுக்களில் எதுவும் இதை வேண்டிக் கேட்டுக்கொள்வதாக நான் அறிந்ததில்லை என்றாலும், மக்களில் சிலர், இசைக்கருவிகள் இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளன என்று கூறும் அளவிற்குச் செல்கின்றனர். இவ்வார்த்தையானது இசைக்கருவிகளின் பயன்பாட்டை உள்ளாகக் கொண்டிருக்கும் என்றால், கர்த்தர் இசைக்கருவி இசைப்பதைக் கட்டளையிட்டுள்ளதால், இசைக்கருவி தேவைப்படும் என்றாகிறது. மற்றும், அந்த இசைக்கருவிகள் கம்பிக் கருவிகளாக மாத்திரமே இருக்க வேண்டும், ஏனெனில் அது மாத்திரமே வசனத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாக உள்ளது. பவுலும் சீலாவும் சிறைச் சாலையில் கர்த்தரை நோக்கிப் பாடி ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அவர்களிடத்தில் இசைக்கருவி எதுவும் இருந்திருக்காது என்பது நியாயமான அளவுக்குத் தெளிவாகிறது (காண்க நடபடிகள் 16:25).* [13]*ஒருவர், "ஞானஸ்நானம்" என்பது தெளித்தலையும் ஊற்றுதலையும் உள்ளடக்குகிறது என்று வாதிடும்போது இதே தவறு நடைபெறுகிறது.* [14]*A cappella என்பது "சிற்றாலயத் தின்படி" என்று அர்த்தப்படும் (இலத்தீன் மொழியில் இருந்து வந்த) இத்தாலியச் சொற்றொடராகும்.* [15]*இந்தக் கடிதத்தின் பிற்பகுதியில் நான் சபை வரலாற்றைப் பற்றிய கூடுதல் கலந்துரையாடலைக் கொடுப்பேன். இருப்பினும் இப்போதைக்கு, மெக் கிளின்ட்டாக் மற்றும் ஸ்ட்ராங் (இவர்கள் கிறிஸ்துவின் சபைகளின் அங்கமாக இருந்திராத எழுத்தாளர்கள் ஆவர்) ஆகியோரின் பின்வரும் மேற்கோளைக் கவனியுங்கள்: "கிரேக்கர்களும் மற்றும் யூதர்களும் தங்கள் பரிசுத்த பாடல்களில் இசைக் கருவிகளின் துணையைப் பயன்படுத்தப் பழக்கப்பட்டு இருந்தனர். அதுபோன்றே, கிறிஸ்தவத்திற்கு மனமாறியவர்களும் இவ்வகையான பாடலுக்குப் பழக்கப்பட்டவர்களாக இருந்திருக்க வேண்டும்; இருந்தபோதிலும், தொடக்காலக் கிறிஸ்தவர்கள் தங்கள் மத ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டைத் தழுவத் தவறியிருந்தனர் என்று பொதுவாக நம்பப்படுகிறது"* (John McClintock and James Strong, *Cyclopaedia of Biblical, Theological,*

*and Ecclesiastical Literature* [Grand Rapids, Mich.: Baker Book House, 1879], 6:759). [16]மற்ற சந்தர்ப்பப் பொருள்களில், லூக்கா 15:25ல் தோன்றுகிற ஒரு வார்த்தையாக *symphonia* என்பது உள்ளது. மற்றும் இது "பேண்டு வாத்தியக் கோஷ்டி, பாடகர் இசைக்குழு … போன்றவற்றில் உள்ள பல இசைக்கருவிகளினால் உண்டாக்கப்படும் இசை" என்பதைக் குறிப்பிடுகிறது (Bauer, 788). 1 கொரிந்தியர் 14:7 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 14:2 ஆகிய வசனங்களில் உள்ள *kitharizo* என்பது இன்னொரு வார்த்தையாக உள்ளது, இது "யாழ் அல்லது சுரமண்லத்தை மீட்டி, புல்லாங்குழலை ஊதுதல்" என்று அர்த்தப்படுகிறது (Bauer, 433). (*Mousikos*); "music" என்ற இன்னும் ஒரு வார்த்தையானது, பொதுவாக இசையைக் குறிக்கிறது மற்றும் இது வெளிப்படுத்தின விசேஷம் 18:22ல் தோன்றுகிறது, இது "இசைக்கு உரிய" என்று விளக்கப்படுகிறது, மற்றும் இது "இசையமைப்பாளரை" குறிப்பிடலாம் (Bauer, 530). [17]சிலர், ஆமோஸ் 6:4, 5ம் வசனங்கள், இசைக்கருவிகளைத் தாவீது பயன்படுத்தியதை அங்கீகாரம் இல்லாதவை என்பதாகக் கண்டனம் செய்கிறது என்று விவாதித்துள்ளனர். இருப்பினும் இந்த விவாதம், குறிப்பாக நாளாகம வசனப்பகுதி களின் கண்ணோட்டத்தில் செல்லத் தக்கதாக இருப்பது இல்லை. இஸ்ரவேலின் சிறுகுழுவினர் "யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்தை" பற்றிக் கவலை இல்லாது இருக்கையில், "தாவீதைப்போன்று தங்களுக்குக் கீதவாத்தியங்களை உண்டு பண்ணிக் கொண்டனர்" என்பதால் ஏற்பட்ட பேரழிவையே ஆமோஸ் கண்டனம் செய்தார் (6:6). இது முன்னுரிமைகளை தவறாக்கும் பழைய ஏற்பாட்டு உதாரணங்களில் ஒன்றாக உள்ளது. [18]இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தையை, NIV வேதாகமம் "hymn" என்று தரவழைக்கிறது, ஆனால் பின்வரும் வேதாகம மொழிபெயர்ப்புக்களில், *psalmos* என்ற கிரேக்க வார்த்தை, "psalm" என்று ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது; KJV, ASV, NKJV, and NASB. [19]இந்த நன்றிப் பலிகளில் பலவற்றிற்குக் குறிப்பான அறிவுறுத்தல்கள் இருக்கின்றன (காண்க லேவியராகமம் 7:11-15). [20]இந்தக் கருத்து, KJV வேதாகமத்தின் சொற்றொடராக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. "ஒரு அடையாளம் கொடுத்தல்" என்று அர்த்தப்படும் *semaino* என்பது கிரேக்க வார்த்தையாக உள்ளது; NIV வேதாகமம், இவ்வார்த்தையை "அறியச் செய்தல்" என்று மாத்திரமே தரவழைக்கிறது.

[21]J. Curtis Manor, *Workbook on Denominational Doctrines,* vol. 1, *Basic Dogmas and Attitudes,* rev. ed. (Mariposa, Calif.: By the author, 1996), 95. [22]பவுல், எருசலேமில் கம ாலியேல் என்ற ரபீயின் பாதப்படியின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டவர் (நடபடிகள் 22:3) என்ற வகையில், தேவாலய ஆராதனையின் நடைமுறைகளுக்குப் பழக்கமானவராக இருந்தார். [23]"Psallo" என்ற கிரேக்க வார்த்தை, நவீன காலத்து கிரேக்கர்கள் மத்தியில் பரிசுத்த இசைக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது, இது கிழக்கத்திய சபையில் வாய்ப்பாட்டைத்தவிர வேறு எதுவாகவும் ஒருக்காலும் இருந்திருக்கவில்லை. அதில் தொடக்கால சபையைப்போன்றே, இசைக்கருவி இசை என்பது அறியப்படாததாக இருக்கிறது. ரோமிஷ் எழுத்தாளர்களைப் பின்பற்றிய சர். ஜான் ஹாக்கின்ஸ் என்பவர், இசையின் வரலாறு பற்றிய தமது மிகப்புலமை வாய்ந்த புத்தகத்தில், ஆர்கன் என்ற வாத்தியத்தை கி.பி. 660 போப் விட்டலியன் என்பவர் முதன்முதலாக இசைகளில் அறிமுகப்படுத்தியதாகக் கூறுகிறார். ஆனால் சபைதொடர்பான புதைப்பொருளாராய்ச்சி செய்யும் மாணவர்கள், இன்னும் பிந்தி ய தேதி வரையிலும் சபைகளில் இசைக்கருவி இசை பயன்படுத்தப்படவில்லை என்று பொதுவாக ஒப்புக்கொள்கின்றனர்; ஏனெனில் தாமஸ் அக்வினால் என்பவர் கி.பி. 1250ல் பின்வரும் குறிப்பிடத்தக்க வார்த்தைகளை எழுதினார்: 'நமது சபையானது, யூதத்துவம ற்றது என்று காணப்படுவதற்காக, தேவனை ஏற்றித் துதிக்க சுரமண்டலம் மற்றும் வீணை

போன்றே இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதில்லை' " (McClintock and Strong, 739). [24]சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, யூதர்கள் மத்தியில் இருந்ததைக் காட்டிலும் புறஜாதி யார் மத்தியில், சுவிசேஷத்திற்குப் பதில்செயல் செய்தல் அதிகமாக இருந்தது என்பதை, அப்போஸ்தலருடைய நடபடிகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடியான, சபையின் தொடக்கால வரலாறு தெளிவாக்குகிறது. [25]நீரோவின் காலத்தில் கிறிஸ்தவர்கள் உபத்திரவப் படுத்திய நிகழ்ச்சியானது (கடைசியில் பவுல் இந்தக் காலகட்டத்தில்தான் மரணதண்டனை விதிக்கப்பட்டார் என்பது உறுதி) ஒரளவு உள்ளூரில் மாத்திரம் நிகழ்ந்தது மற்றும் இது குறிப்பிடத்தக்க அளவுக்கு ரோமப்பேரரசு முழுவதிலும் பரவவில் லை. [26]மெக் கிளின்ட்டாக் மற்றும் ஸ்டிராங் ஆகியோரின் புத்தகத்தில் இருந்து தகவல் தரப்பட்டுள்ளது, இது ஒன்பது நூற்றாண்டுகள் வரையிலும் அதிக பரவுகை எல்லையில் எந்த வேகத்திலும் நடைபெறவில்லை. [27]இது மிலான் உத்தரவின் தேதியாக உள்ளது, இந்த நாளில் கிறிஸ்தவத்தின் சட்டபூர்வத் தன்மை அங்கீகரிக்கப்பட்டது (Graydon F. Snyder, "Christianity," *Anchor Bible Dictionary,* vol. 1, ed. D. N. Freedman (New York: Doubleday, 1992), 970. [28]பலர், இந்த எச்சரிக்கையானது யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் கண்ட தரிசனங்கள் மற்றும் அறிவித்தல்கள் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்றும் இது புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிக்குத் தொடர்புடையது அல்ல என்றும் உறுதிப்படுத்துகின்றனர். இந்த எச்சரிக்கையானது யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றுடன் அடிப்படை அக்கறை உடையதாக இருக்கிறது என்பது ஏறக்குறைய நிச்சயமாகவே உண்மையாக இருக்கையில், இந்தக் கொள்கையானது தேவனு டைய சித்தத்தின் முழு அமைப்பிற்கும் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படுவதாக உள்ளது. மற்ற எச்சரிக்கைகளுடன் தொடர்புடைய வகையில் கவனிக்கும்போது இது விசேஷித்த வகையில் தெளிவாகிறது. [29]ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோளானது பொதுவாக, தேவனுடைய வெளிப்பாட்டின் அடிப்படையில் இருக்க வேண்டிய எந்த உண்மையான முயற்சியிலுமிருந்து விலகி, தேவனுடைய போதனை மற்றும் அறிவுறுத்துதலை சமரசம் செய்யும் அணுகுமுறையை மேற்கொண்டு, மனித உண்மை யற்ற தன்மையின் அடிப்படையில் மதக்குழுக்களை ஒன்றிணைக்க முயற்சி செய்வதாகி உள்ளது வருத்தத்திற்கு உரியதாகும். [30]இந்தப் பண்புகள் கிறிஸ்தவரின் வாழ்வில், "பெருக" வேண்டும் என்று பேதுரு கூறினார் (2 பேதுரு 1:8).

[31]இவ்வசனப்பகுதியில் (சிலர் இவ்வசனப்பகுதியை அதிகமாக எளிமைப் படுத்தியுள்ளபடி), முழுக்காட்டுதலினால் ஞானஸ்நானம் செய்விக்கப்பட வேண்டும் என்பது பவுலின் வாதத்தினுடைய அடிப்படைக் கருத்தாக இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, மறுபடி பிறந்துள்ள நிலையில், கிறிஸ்தவர்கள் தேவனுக்கும் அவரது எதிப்பார்ப்புகளுக்கு ஏற்புடைய நடத்தையைக் காட்சிப்படுத்த வேண்டும் என்று இது வெளிப்படுத்துகிறது. நாம் பாவம் செய்வதற்கு மாறாக, "நீதியின் ஆயுதங்களாக" (ரோமர் 6:13) நம்மையே தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். [32]ஆராதனைக்குப் பதிலி ஏற்படுத்தலுக்கான புதைப்பொருள் ஆராய்ச்சிச் சான்றுள்ளது. உண்மையான நபருக்குப் பதிலியாகச் சேவிக்கும்படி ஒரு தெய்வத்தின் புனிதக் கோவில் அல்லது பீடத்தின் மீதுள்ள விசேஷித்த வகையிலான சிறு சிலைக்கு, அதை ஆராதிப்பவர்கள் ஒரு சிறிய வேண்டுதல் காணிக்கையை வைப்பார்கள். இப்படிப்பட்ட நடைமுறைகளைத் தேவன் குறிப்பாக விலக்கியிருப்பதில்லை என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது, ஆனால் அவரது மேற்மறையான கூற்றுகள், அவற்றை அவை தவிர்த்து இருப்பதாகப் பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. ஆராதிப்பவர்கள் அவ்வப்போது, ஒரு பீடத்தின் முன்பாக அல்லது ஒரு புனிதக்கோவிலில், மெழுகுவர்த்தி

*களைக் கொளுத்தி வைத்து அவற்றை அங்கு அப்படியே விட்டுச் செல்கின்றனர்; இது பதிலி வேண்டுகோளுக்கான நவீன உதாரணமாக உள்ளது.* [33]*தூபவர்க்கம் என்பது புறதெய்வ அல்லது அசுத்த தெய்வ வழிபாட்டின் பொதுவான அம்சமாகவும் இருந்தது. இதற்கான ஆதாரங்கள் கல்வெட்டுகளில் மாத்திரமல்ல, ஆனால் புதைபொருள் ஆராய்ச்சியின் சந்தர்ப்பப்பொருளில் கண்டறியப்பட்ட கைவேலைப்பாடுகளிலும் காணப்படுகின்றன.* [34]M. C. Kurfees, *Instrumental Music in the Worship or the Greek Verb Psallo, Philologically and Historically Examined* (Nashville: Gospel Advocate Co., 1969), 71-78. [35]*சாலமோன் மண்டபம் என்பது எருசலேம் பெரிய தேவாலய வளாகத்தின் ஒரு பாகமாக இருந்தது மற்றும் இது "புறஜாதியாரின் மண்டபம்" என்று அறியப்பட்ட இடத்தின் பாகமாக இருந்தது.* [36]*இன்றைய நாட்களில் சபைக்குழுமங்கள், ஒன்றுகூடி வரும் இடத்திற்காகவும் செயல்முறைகளுக்காகவும் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு, அவைகள் சுவிசேஷ ஊழியம், தேவையில் இருப்பவர்களுக்கு உதவுதல் மற்றும் பக்திவிருத்தியூட்டுதல் என்ற முக்கியமாக ஊழியத்தைப் புறக்கணிப்பதால் சமரசம் செய்கின்றனர்.* [37]*சபைகூடுகைகளில் பெண்களின் பணிப்பொறுப்புகள்பற்றிப் பவுலின் உரைகள் இனியும் ஏற்புடையவைகளாக இருப்பதில்லை என்று சபையில் பலர் விவாதம் செய்கின்றனர். இருப்பினும் இந்த விவாதத்தை ஏற்படுத்துகிறவர்கள், அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள், படைப்பின் வரிசைமுறை மற்றும் பாவத்தின் அறிமுகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பதற்கு வெற்றிகரமாகப் பதில் அளித்திருப்பதில்லை (காண்க 1 தீமோத்தேயு 2:11-14). பவுலின் மதிநுட்பமானது இந்தக் கட்டுப்படுத்துதலின் அடிப்படையை, நடைமுறைக்கு வடிவமைக்கப்பட வேண்டிய ஒரு கலாச்சாரத்திற்கு முன்பாக, படைப்பு வரையிலும் பின்தள்ளுகிறது.*